220

220

# கோபால்

## புதிய தமிழ் வாசகம்

### ஆறும் வகுப்பு

சென்னைப் புரசைப்பாக்கம்
லுத்தரன் மிஷன் உயர் கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை
இயற்றியது.

பிரசுர கர்த்தர்:
பி. ஜி. பால் அண்டு கம்பெனி
ஜார்ஜ் டவுன், சென்னை
1933 [விலை அணா, 7.

TB
031,6 (6)
N33

# கோபால்

## புதிய தமிழ் வாசகம்

### ஆறும் வகுப்பு

சென்னைப் புரசைப்பாக்கம்
லுத்தரன் மிஷன் உயர் கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான்
**மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை**
இயற்றியது.

பிரசுர கர்த்தர்:
பி. ஜி. பால் அண்டு கம்பெனி
ஜார்ஜ் டவுன், சென்னை

பதிப்புரிமை] 1933 [விலை அணா, 7.

## பொருளடக்கம்


பொருள் பக்கம்

உரை நடைப் பாடம் :

1. கைத்தொழிலின் சிறப்பு ... 1
2. காலத்தின் அருமை ... 7
3. 'தீராக் கோபம் போராய் முடியும்'–I ... 10
4. இரவீந்திர நாத தாகூர் ... 14
5. 'தீராக் கோபம் போராய் முடியும்'–II ... 19
6. சிலந்திப் பூச்சியின் திறமை .... 24
7. பேராசையின் பயன் ... 27
8. தாமஸ் ஆல்வா எடிசன் ... 33
9. பழியோரிடம் பாவமோரிடம் ... 38
10. காகம் பாம்பைக் கொன்றது ... 44
11. சிவாஜி மன்னர் ... 46
12. ஔவையாரும் அன்பிலா விருந்தும் ... 50
13. திலகாஷ்ட மகிஷ பந்தம் ... 55
14. எலி மகள் கதை ... 59
15. சிக்கனம் ... 61
16. நளன்–I ... 65

| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| 17. நக்கீரர் | ... | 69 |
| 18. நளன்–II | ... | 75 |
| 19. சதகச் செய்யுள் | ... | 82 |
| 20. தசரத ராமரும் பரசு ராமரும் | ... | 84 |
| 21. மாணவர் | ... | 89 |
| செய்யுட் பாடம் : | | |
| I. துதி கவிகள் | ... | 97 |
| II. நீதி சிந்தாமணி | ... | 99 |
| செய்யுட் பாடக் குறிப்புரை | ... | 107 |

ஸ்ரீ:

# முன்னுரை

இளமாணவர் இனிது கற்று, மொழியறிவும், ஒழுக்கச் சீர்திருத்தமும், உரை நடை எழுதுந் திறனும், பேச்சு வன்மையும் அடைதற்கான முறையில் பாட புத்தகங்கள் சிலவற்றை எழுதி வெளியிடல் வேண்டுமென்னும் விருப்பத்தால், யான் இவ்வாசக வரிசையை எழுதி வெளியிடலானேன்.

இவ்வாசக வரிசை இளமாணவர் மகிழ்ந்து கற்றுப் பயனடைதற்குரிய சீரிய கதைகளையும், செயற்கரிய செய்து பெரும்புகழீட்டிய பெரியார் பலரின் வாழ்க்கை வரலாறுகளையும், மக்கள் அறிதற்பாலனவாகிய பொருள் பொதிந்த கட்டுரைகளையும், இனிய கதை தழுவிய செய்யுட் பகுதிகளையும், மனவிருளைப் போக்கி மெய்ஞ்ஞான ஒளியைப் பரப்பவல்ல தமிழறிஞர் பெருமக்கள் இயற்றிய நீதிச் செய்யுட்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்வது வெளிப்படை. இவ்வாசக வரிசையின் உரை நடை எளியதும் இனியதுமான முறையில் அமையும்படி முயன்றமைத்திருக்கின்றேன்.

மாணவர்கள் உரை நடைப் பாடங்களைப் படிக்கும்போது, விரையாமல், தெளிவாகக் கேட்போர்க்குக் கருத்து விளங்கும்படி படிக்கப் பழகுதல் கல்வி கற்றற்குச் சிறந்த முறையாகும். ஆசிரியர்கள் இம்முறையிற்

பெரிதுந் தங்கருத்தைச் செலுத்தல் வேண்டும். மாணவரிற் சிலர் படிக்கும்போது தாம் படிப்பதன் கருத்தைத் தாமும் உணராமலும், பிறர்க்கும் புலப்படாமலும் படிப்பர். இதனால், அவர்கள் கற்பது மனத்தில் நன்கு பதிவதில்லையென்பதைக் கல்வி கற்பிக்கும் பழக்கமுடைய ஆசிரியர் பலரும் அறிவர். ஆதலின், இளமாணவர் திருத்தமாகப் படிக்கவும், படித்ததை மனத்தில் நன்கு பதியச் செய்துகொள்ளவும் பழகும்படி செய்தல் ஆசிரியர்களின் கடமைகளுள் முதற்கடமையாகும். ஒரு பாடத்தைப் படித்து முடித்ததும், அப்பாடத்திலுள்ள பொருளைச் சுருக்கிச் சொல்லும்படி செய்வதாலும், தகுந்த கேள்விகளைக் கேட்டு அவற்றிற்கு விடைகளை அவர்களே சொல்லும்படி செய்வதாலும் மாணவர்களுக்குள்ள குறையை ஆசிரியர்கள் ஒருவாறு நீக்கிவிடலாம்.

எழுதுவதால் ஏற்படும் பயன் அளவிறந்ததாகும். ஆதலின், ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடத்திலும் சுருக்கமான விடைகள் ஏற்படக்கூடிய கேள்விகளைக் கொடுத்து மாணவர்களை அக்கேள்விகளுக்கு விடையெழுதப் பழக்குதல் வேண்டும். மாணவர்கள் எழுதும்போது காற்புள்ளி (,) அரைப் புள்ளி (;) முக்காற் புள்ளி (:) முற்றுப் புள்ளி (.) ஆச்சரியக்குறி (!) கேள்விக்குறி (?) முதலிய நிறுத்தக் குறிகளை வாக்கியங்களில் ஏற்ற இடங்களில் அமைத்தெழுதும்படி அவர்களைப் பழக்குவதால் பெருநன்மை யேற்படலாம். ஒரு சொல்லை ஒரு வரியின் இறுதியில் இடமின்மையால் உடைத்துக் கீழ் வரியில் எழுதும்போது, அங்ஙனம் உடைத்த சொல்லின்

முற்பகுதியின் இறுதியில் ஒரு சிறு சிற்றை இடச் செய்தல் வேண்டும்.

யான் எழுதிய இளைஞர்க்கான நூல்களைத் தத்தம் பள்ளிக்கூடங்களில் பாடமாக அமைத்து, இத்துறையில் மேன்மேலும் உழைக்குமாறு என்னை ஊக்கி வருந் தமிழாக்கங் கருதிய அன்பர் பலரும், இவ்வாசக வரிசையினையும் அங்ஙனம் நல் வரவேற்று ஆதரிப்பர் என்னுந் துணிவுடையேன்.

இவ்வாசக வரிசையில் குறை பல தோன்றுதல் கூடும். அக்குறைகளை யுணரும் ஆசிரியர்களாகிய அன்பர்கள் அவற்றை அன்பு கூர்ந்து எனக்குத் தெரிவிப்பார்களாயின், அவர்களிடத்து நன்றி பாராட்டுங் கடப்பாடுடையேன்; விரைவில் அக்குறைகளை நீக்கவும் முயல்வேன்.

மே. வீ. வே.

# உரை நடைப் பாடம்

ஸ்ரீ:

கோபால்

# புதிய தமிழ் வாசக புஸ்தகம்

## (ஆறும் வகுப்பு)

### 1. கைத்தொழிலின் சிறப்பு

'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு' என்பது நம் நாட்டுப் பெரியோர்களும் அயல் நாட்டு அறிஞர்களும் அறிந்து கூறிய உண்மையாகும். கல்வியைப் புத்தகக் கல்வி என்றும் கைத்தொழிற் கல்வி என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம். புத்தகக் கல்வி கற்றவர்களைப்போலவே கைத்தொழிற் கல்வி கற்றவர்களும் எவ்விடத்திற்குச் சென்றாலும் நன்மை அடைவார்கள். செல்வமுடையவன் தான் பிறந்து வளர்ந்த ஊரிலும் சிலராலேயே விரும்பப்படுவான். கற்றவனை எல்லா ஊர்களிலும் உள்ள கற்றவர்கள் எல்லோரும் விரும்பி அவனுக்கு வேண்டும் நன்மைகளைச் செய்வார்கள். இதை விளக்கும் கதை ஒன்றைப் படிப்போம்:

ஓர் ஊரில் பெருஞ்செல்வன் ஒருவன் இருந்தான். அவன் ஓர் அழகான மூன்றடுக்கு மாளிகையில் வாழ்ந்து வந்தான். அவன் தகப்பன் தேடி வைத்த ஏராளமான

செல்வத்தை வைத்துக்கொண்டு உண்பதிலும், உறங்குவதிலும், தன் வாழ் நாளை இன்பமாகக் கழித்து வந்தான். அவனுக்குப் பல வேலையாட்கள் இருந்தார்கள். அவர்கள், அவனை மிகவும் போற்றி, அவன் காலால் இட்ட வேலையைத் தங்கள் தலையால் ஏற்றுச் செய்து வந்தார்கள். ஆகையால், அந்தப் பணக்காரன், ஏழைகள் தனக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்வதற்கே பிறந்திருக்கிறார்கள் என்று எண்ணி, அவர்களை அதிகாரத்தோடு நடத்தி வந்தான்.

அந்தப் பிரபுவின் மாளிகைக்குப் பக்கத்தில் ஓர் ஏழை ஒரு சிறு குடிசையில் வாழ்ந்து வந்தான். அவனிடத்தில் எல்லா விதமான நல்ல குணங்களும் பொருந்தி இருந்தன. அவன் கைத்தொழிலில் வல்லவன்; சதுப்பு நிலத்தில் விளையும் கோரைகளை அறுத்து வந்து, அவற்றால் விதம் விதமான அழகுள்ள கூடை முதலியவைகளைச் செய்து விற்றுச் சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தான். தினந்தோறும் உழைத்து வேலை செய்துவந்ததால், அவன் குடிப்பது கூழானாலும், அது அவனுக்கு அமுதம் போல இருந்தது. இரவில் அவன் கவலை இல்லாமல் அயர்ந்து தூங்கிக் காலையில் சூரியன் புறப்படுவதற்கு முன் எழுந்திருந்து, தன் தொழிலைத் தொடங்கிச் செய்வான். அவன் தான் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பொருளைத் தனக்கு மாத்திரம் பயன்படுத்திக்கொள்ளாமல், அதைக் கொண்டு தன்னைக்காட்டிலும் ஏழை எளியவர்களான மக்களுக்கும் உதவி செய்து வந்தான். அதனால், அவனை அவ்வூரார் எல்லோரும் விரும்பினர்.

பணக்காரனே, நாள் முழுதும் ஒரு வேலையும் செய்யாதிருந்ததால், உண்ட உணவு ஜீரணமாகாமலும், இரவில் நித்திரை இல்லாமலும் வருந்தினன். அவன் ஒருவருக்கும் ஓர் உதவியும் செய்யாததால், அவனுக்கு நண்பர் ஒருவரும் இல்லாமற் போயினர். அவன் தினந்தோறும் பல்லக்கில் ஏறிச் செல்லும்போது, கூடை முடைகிறவன் சந்தோஷத்தோடு பாடிக்கொண்டே தன் வேலையைச் செய்வதைக் கண்டு, அவன்மேல் பொறாமை



கொண்டான். அவன், "இஃது என்ன ஆச்சரியம்! இந்த ஏழை, தன்னிடம் சாப்பாட்டுக்கு வேண்டிய பொருள் இல்லாதிருந்தும், இவ்வளவு சந்தோஷமாகத் தன் காலத்தைக் கழிக்கின்றானே! அளவற்ற செல்வத்தைப் பெற்று இருந்தும், எனக்கு இவன் சந்தோஷத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கும் ஏற்படவில்லையே!" என்று எண்ணினன். அதனல், அவன் பொறாமை நாளுக்கு நாள் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. அந்-

தப் பொறுமையின் காரணத்தால், அவன் கூடை முடைகிறவனைச் சரியானபடி தண்டிக்க நினைத்தான்.

ஒரு நாள் அவன் தன் வேலையாட்களை யழைத்துக் கூடை முடைகிறவன் இரவில் படுத்துத் தூங்கும்போது அவன் குடிசைக்குத் தீ வைக்கும்படி ஏவினான். அவர்கள் அப்படியே செய்தார்கள். குடிசை எரியத் தொடங்கினதும், அந்த ஏழை விழித்துக்கொண்டு, வெளியே ஓடி வந்துவிட்டான். அவன் பிழைத்ததே பெருங்காரியம் ஆயிற்று. குடிசை நெருப்பினால் சாம்பலாக்கப்பட்டது.

கூடை முடைகிறவனுக்குச் செல்வன் செய்த கொடுமையால் அளவில்லாத துக்கம் உண்டாயிற்று. உடனே அவன் அந்த ஊர் அதிகாரியினிடம் சென்று அழுது முறையிட்டான். அதிகாரி செல்வனைத் தன்னிடம் அழைப்பித்து, அவன் ஏழைக்குச் செய்த கொடுமையை விசாரித்தறிந்து, ஏழையைப் பார்த்து, "ஐயா, நீ இதற்காக வருந்தாதே. இந்தச் செல்வனுக்குச் செல்வச் செருக்கால் தான் செய்வது இன்னது என்று தெரியவில்லை. நான் இவன் கர்வம் அடங்கும்படி இவனுக்குப் புத்தி கற்பிக்கிறேன். ஆனால், நான் சொல்லுகிற இடத்திற்கு நீயும் இவனுடன் சென்று சில நாள் அங்கேயே வாழ வேண்டும்," என்றான்.

ஏழை, "ஐயா, என்னிடமிருந்த சிறு பொருளும் இந்தச் செல்வரால் அழிக்கப்பட்டது. ஆகையால், நான் இவ்விடத்தில் இருந்து வாழ்வதும் வேறிடம் சென்று வாழ்வதும் எனக்கு ஒன்றே. நான் தாங்கள் கட்டளை இடுவது போல நடக்கச் சித்தமாக இருக்கிறேன்," என்றான்.

உடனே ஊர் அதிகாரி அவ்விருவரையும் ஒரு கப்பலில் ஏற்றிக் காட்டு மிராண்டிகள் வசிக்கும் ஓர் ஊரிற் சென்று வாழும்படி கட்டளையிட்டு, அனுப்பி-விட்டான். கப்பலோட்டிகள் அவ்விருவரையும் அவ்-வூரில் இறக்கிவிட்டுச் சென்றார்கள். அவர்கள் ஊருக்-குள் நுழைந்ததும், நாகரிகமற்ற அவ்வூரார் அவர்களைச் சூழ்ந்துகொண்டனர். அவர்களோடு பழகியறியாத செல்வன், அவர்கள் பேசும் பாஷையுந் தெரியாமல், அவர்கள் தன்னை என்ன செய்வார்களோ என்று அஞ்சினான். ஏழையோ, அவர்களுக்குத் தானும் செல்-வனும் சினேகிதர்களாக இருப்பதாகத் தன் கைச் சாடையால் விளக்கி, அவர்களோடு உறவு கொண்டாடி-னான். அதனால், அவர்களும் அவனிடம் அன்போடு நடந்துகொண்டார்கள்.

பிறகு அவர்கள் செல்வனுக்கும் ஏழைக்கும் பல கடினமான வேலைகளையிட்டார்கள். ஏழை, வலிய தேகமுடையவனாகையால், அந்த வேலைகளை விருப்-புடன் செய்து வந்தான். செல்வன், சுக வாழ்க்கை வாழ்ந்தவனாகையால், அவ்வேலைகளைச் செய்தற்கு முடி-யாமல், திண்டாடினான். அதனால், அவ்வூரார் ஏழைக்கு அதிக உணவும் பணக்காரனுக்குக் கால் வயிற்றுக்கும் போதாத உணவும் கொடுத்து வந்தனர். அதுவுமன்-றிச் சிலர், பணக்காரனுடைய சோம்பலைக்கண்டு, அவனை வெறுக்கவும் தொடங்கினர்.

கூடை முடைகிறவன் கோரைகளால் பல விதப் பொருள்களைச் செய்து கொடுக்க, அவற்றைக் கண்டு அவ்வூரார் மிகவும் சந்தோஷித்து, அவனுக்கு வேண்டிய

சௌகரியங்களையெல்லாம் செய்து கொடுத்தனர். பணக்காரன் கூடை முடைவதற்கு வேண்டிய கோரைகளை அறுத்துக் கொடுத்து, ஏழைக்குக் கீழ்ப்பட்டு வேலை செய்யத் தொடங்கினான்.

இப்படிச் சில மாதங்கள் கழிந்தன. பிறகு ஊரதிகாரியின் கட்டளைப்படி அவர்கள் மறுபடியும் சொந்த ஊருக்குக் கொண்டு வந்து விடப்பட்டார்கள். ஊரதிகாரி செல்வனைக் கோபக் குறிப்போடு நோக்கி, "செல்வனே, நீ இப்பொழுது கைத்தொழிலின் மேன்மையை அறிந்திருப்பாய் என்று எண்ணுகிறேன். ஆகையால், முதலில் இந்த ஏழையை இகழ்ந்து நீ இவனுக்குச் செய்த கொடுமைக்காக உன் செல்வத்தில் பாதியை இவனுக்குக் கொடுத்துவிட்டு, இனி நல்ல வழியில் நடக்க வேண்டும்," என்றான்.

அதைக் கேட்ட ஏழை, "ஐயா, எனக்கு இவர் பொருளில் சிறிதும் வேண்டா. நான் கஷ்டப்பட்டுப் பொருள் தேடி வாழவே விரும்புகிறேன். இனி இவர் எனக்குத் தீமை செய்யாமல் இருந்தால் போதும்," என்றான். அதைக் கேட்ட செல்வன் வெட்கமடைந்து, தான் அப்படியே நடந்துகொள்வதாக வாக்குறுதி செய்தான். பின்பு அவன் அவ்வேழையின் குடிசையை முன் போலக் கட்டிக் கொடுத்து, ஏழை எளியவர்களிடம் அன்பு காட்டி, மரியாதையாக வாழ்ந்து வந்தான்.

---

## 2. காலத்தின் அருமை

இவ்வுலகத்தில் சிலர் வறியவராகவும், சிலர் பணக்காரராகவும், சிலர் கல்வியிலே மிகச் சிறந்தவராகவும், சிலர் கல்வி அறிவே இல்லாத முழு மூடராகவும், சிலர் தேக வலிமை யுடையவராகவும், சிலர் அஃது இல்லாத நோயாளராகவும் இருப்பதை நாம் காண்கிறோம் அல்லவா? இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போமானால், காலத்தின் அருமையை உணர்ந்து, அதைச் சரியான முறையில் உபயோகிப்பதும் அப்படிச் செய்யாமையுமேயாகும் என்பது நமக்குத் தெரிய வரும்.

காலம் என்பது, பலர் எண்ணுவதுபோல, சாதாரணமானது அன்று. அது பொன்னையும் மணியையும்விட மேலானது என்றே சொல்லலாம். காலத்தின் பகுதியாகிய ஒவ்வொரு நொடிப் பொழுதும் நம்மால் மிகவும் போற்றத் தகுந்தது ஆகும். காலத்தை அவமதிப்பவன் எவனும் இவ்வுலகத்தில் ஒரு விதப் பலனையும் அடையமாட்டான் என்பது முக்காலும் உண்மை. தேனீக்களைப் பார்த்தால், அவை இடை விடாமல் உழைத்துத் துளித்துளியாக ஒவ்வொரு பூவிலும் உள்ள தேனைச் சேகரித்து, அத்தேனை அதற்காகக் கஷ்டப்பட்டுக் கட்டப்பட்ட கூட்டில் சேர்த்து வைப்பதை நாம் அறியலாம். அந்த அற்ப ஈக்களால் முயன்று தேடப்பட்ட தேன் நமக்கு எவ்வளவு பயன் தரத் தகுந்த பொருளாக இருக்கிறது! அற்ப ஈக்கள் காலத்தை வீணாக்காமல் உழைப்பதால் தமக்கும்பிறர்க்-

கும் நன்மையை உண்டாக்குகின்றனவே! ஆறு அறிவு படைத்த மனிதராகிய நாம் காலத்தை எவ்வளவு போற்றிப் பயன்படச் செய்துகொள்ள வேண்டும் என்பதை அறிந்து, அதன்படி நடக்க வேண்டாவா ?

நாம் நம்முடைய வாழ்க்கையில் பயன் படுத்தாமல் கழித்துவிட்ட காலத்தை மறுபடியும் அடைய முடியுமா? 'அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது,' என்னும் பழமொழிக்கு ஏற்றபடி, கழிந்த காலம் நாம் வருந்தி யழைத்தாலும் வாராது; போனது போனதுதான். சிலர் வீணில் தமது வாழ் நாளில் பெரும்பகுதியைப் போக்கிவிடுகின்றனர்; பின்பு அருமையான ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கி, அதைச் செய்து முடிக்கக் காலம் போதாமையால், 'ஐயோ! நாம் மோசம் போனேமே! முன்னமே நமக்கு இதைப்பற்றித் தெரியாமல் போயிற்றே!' என்று ஏங்கி நிற்பதை நம்மில் சிலர் காண்கிறோமல்லவா ?

ஆகையினால், நாம் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் பொன்னைப் போலப் போற்றிப் பயன்படுத்திக்கொள்ள நம் இளமைப் பருவத்திலிருந்தே பழகி வர வேண்டும். ஒருவன் தினந்தோறும் பதினைந்து நிமிஷம் கவனத்தோடு கல்வி கற்று வருவானானால், அவன் எந்தத் துறையில் கற்கிறானோ, அந்தத் துறையில் பதினைந்து வருஷங்களில் சிறந்த பண்டிதனாக விளங்குவான் என்று ஒரு பெரிய ஆங்கில அறிஞர் சொல்லி இருக்கிறார். இவ்வுலகில் ஒவ்வொரு துறையிலும் புகழடைந்த மேதாவிகள் காலத்தைச் சரியான முறையில் பயன்படுத்தினவர்களே என்பது அவர்கள் வாழ்க்கைச்

சரித்திரத்தை வாசிப்பவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல நன்கு விளங்கும்.

மாணவர்களில் சிலர் தம் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர்கள் சொல்லிக் கொடுக்கும் பாடங்களை அப்போதைக்கு அப்போதே நன்றாகப் படித்து மனத்தில் அமைத்துக்கொள்வதில்லை; 'இன்றைய பாடத்தையும் நாளைய பாடத்தையும் சேர்த்து நாளைக்குப் படித்துக்கொள்ளலாம்,' என்று எண்ணுகின்றனர். அப்படிச் செய்வது பெருந்தவறே ஆகும். நாளை என்பது என்றும் இல்லை யென்பதற்குச் சமானம் என்றே சொல்லலாம். நாள் வாரமாகவும், வாரம் மாதமாகவும், மாதம் வருடமாகவும் விரைந்து ஓடி மறைவதை நாம் காண்கிறோம் அல்லவா? ஆகையால், இன்றைக்குச் செய்ய வேண்டிய ஒரு வேலையை நாளைக்குச் செய்துகொள்ளலாம் என்று ஒரு போதும் விட்டு வைத்தல் கூடாது. நாள்தோறும் தன் பாடங்களை நன்றாகப் படித்து மனத்தில் அமைத்துக்கொள்ளுகிற மாணவன் எவனும் தன் பரீட்சையில் தவறமாட்டான் என்பது உண்மை. நம் நாட்டுப் புலவர்களில் ஒருவராகிய கபிலர் என்பவர், தாம் பாடிய ஒரு சிறந்த பாட்டில்,

"ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்,"

என்று கூறியிருப்பதை நாம் மறத்தல் கூடாது.

சிலர், 'எங்களுக்கு இதைச் செய்ய நேரமில்லை. அதைச் செய்ய நேரமில்லை,' என்று காலத்தின்மேல்

குறை கூறுவது வழக்கம். அப்படிச் சொல்லுகிறவர் காலத்தைத் தகுந்தபடி வகுத்துக்கொண்டு, எந்தக் காரியத்தை எந்தக் காலத்திலே செய்ய வேண்டுமோ, அந்தக் காரியத்தை அந்தக் காலத்தில் செய்யப் பழகாதவரே யாவர் என்பதை நாம் ஒரு போதும் மறத்தல் கூடாது.

---

## 3. 'தீராக் கோபம் போராய் முடியும்'—I

ஒரு சிற்றூரில் நாகரத்தின முதலி என்னும் குடியானவன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி மிகவும் நல்லவள்; சிக்கனமாகக் குடும்பத்தை நடத்துவதில் கை தேர்ந்தவள். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. அவர்களில் மூத்தவன் மனைவியாகிய கோகிலாம்பாள் என்பவள், மிகவும் வருந்தி உழைக்கத் தகுந்தவள். ஆகையால், நாகரத்தின முதலியின் குடும்பத்தில் செல்வமும் சந்தோஷமும் குடிகொண்டிருந்தன. நாகரத்தின முதலியின் தகப்பன் மட்டும், தள்ளாதகிழவனாகையால், காச வியாதியால் இருமிக்கொண்டு, படுத்த படுக்கையிற் கிடந்தான்.

கோகிலாம்பாள் ஒரு கோழியை வளர்த்து வந்தாள். அக்கோழி வீட்டுப் புறக்கடையில் உள்ள வைக்கோற் போரில் முட்டையிடுவது வழக்கம். கோகிலாம்பாள் அம்முட்டையைத் தினந்தோறும் எடுத்து வந்து, உடைத்துப் பாலிற் கலந்து, காச நோயால் வருந்தும் கிழவனுக்குக் கொடுப்பது வழக்கம். ஒரு நாள் அக்கோழி அடுத்த வீட்டு வைக்கோற் போரிற் சென்று முட்டையிட்டுவிட்டது. ஆகையால், அவள் அன்று

தன் வீட்டு வைக்கோற் போரில் முட்டை காணப்படா-மையால், தன் வீட்டிலுள்ளவர்களில் யாராவது எடுத்து வந்திருக்கலாம் என்று எண்ணி, ஒவ்வொருவரையும் விசாரித்தாள். அவளுடைய கடைக்குட்டி மைத்-துனன், "அண்ணி, உன் கோழி பக்கத்து வீட்டு வைக்-கோற் போரிலிருந்து பறந்து வந்ததை நான் பார்த்தேன். ஆகையால், அஃது அங்கேதான் முட்டை இட்டு-விட்டிருக்கும்," என்றான்.

உடனே கோகிலாம்பாள் பக்கத்து வீட்டுப் போரிற் சென்று முட்டையைத் தேடினாள். அப்பொழுது பக்-கத்து வீட்டுக்காரி அவளைப் பார்த்து, "கோகிலம், நீ இங்கே வந்து என்ன தேடுகிறாய்?" என்று கேட்டாள். கோகிலாம்பாள், "என் கோழி இங்கே வந்து முட்டை இட்டுவிட்டது. அதைத் தேடிப் பார்த்தேன்; காண-வில்லை," என்றாள். உடனே பக்கத்து வீட்டுக்காரி, "கோகிலம், நான் திருடியா? உன் கோழி முட்டை எனக்கு ஏன்? என் வீட்டில் எட்டுக் கோழிகள் முட்-டை இடுகின்றன. நீ என்னை அவ்வளவு அலட்சியமாக நினைத்துவிடாதே," என்று கோபத்தோடு பேசினாள்.

கோகிலாம்பாள் அவளைப் பார்த்து, "குற்றமுள்ள நெஞ்சு அல்லவா குறுகுறுக்கும்? உனக்கு ஏன் கோபம் வருகிறது? போதும்; உன் கோபத்தை அடக்கு. நான் இந்தக் கோபத்திற்குப் பயந்துவிடுவேன் என்று எண்-ணாதே," என்று கூறினாள். பிறகு அவ்விருவருக்கும் வாய்ச் சண்டை முதிர்ந்துவிட்டது; வாய்ச் சண்டை மாறிக் கைச்சண்டை மூண்டது. இதையறிந்த இரண்டு வீட்டுப் புருஷர்களும் வெளிவந்து சண்டையிற் கலந்து-

கொண்டார்கள். நாகரத்தின முதலி வலியவன் ஆகையால், பக்கத்து வீட்டுக் கந்தசாமி முதலியின் தாடியைப் பிய்த்து எறிந்தான். உடனே மற்ற வீட்டுக்காரர்கள் ஓடி வந்து அவர்களை விலக்கிவிட்டார்கள்.

கந்தசாமி முதலி பிய்க்கப்பட்ட தன் தாடியை ஒரு காகிதத்தில் மடித்து எடுத்துக்கொண்டு போய்க் கிராம அதிகாரிக்குக் காட்டி, நாகரத்தின முதலிமேல் வழக்குத் தொடுத்தான். அவன் மனைவி நாகரத்தின முதலியின் மனைவியை வாயில் வந்தபடி வைதுகொண்டு இருந்தாள். இவ்வாறு சண்டை அதிகரித்துக்கொண்டே இருந்தது.

படுக்கையிற் கிடந்த கிழவன் முதலிலிருந்தே சமாதானமாகப் போகும்படி தன் குடும்பத்தாருக்குக்கூறிக்கொண்டிருந்தான். ஆனால், அவர்கள் அவன் சொல்லைக் கேட்கவே இல்லை. அவன் அவர்களை நோக்கி, "நீங்கள் மூடத்தனமாக நடக்கிறீர்கள். இந்தச் சிறிய காரியத்தில் சண்டை பிடிப்பது தகாது. நன்றாக யோசித்துப் பாருங்கள்: இந்தச் சண்டை முழுவதும் ஒரு கோழி முட்டையினால் ஏற்பட்டது. குழந்தைகளில் யாரேனும் அந்த முட்டையை எடுத்திருக்கலாம். அதனால், உங்களுக்கு என்ன குறைந்து போய்விட்டது? 'சிறு பொறி பெருந்தீ' என்பதை நீங்கள் கேட்டதில்லையா? ஒருவர் நமக்குச் செய்த தீமையை உடனே மறந்துவிட வேண்டும். அவர் செய்த தீமைக்குப் பதிலாக நாம் அவர்க்கு நன்மை செய்வோமானால், அவர் அதனால் திருந்தவும் கூடும். வீண் சண்டையை வளர்க்காதீர்கள்," என்று கூறினான்.

நாகரத்தின முதலியும் கிராமாதிகாரியிடம் சென்று வழக்குத் தொடுத்தான். சண்டை சச்சரவுகள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டேயிருந்தன. இரண்டு வீட்டிலு-முள்ள சிறுவர்களும் பெரியவர்களைப் போலவே சண்-டையில் கலந்துகொண்டார்கள். பெண்கள் நீர் எடுக்-கும் கிணற்றினிடத்திலும் துணி தோய்க்கும் ஆற்றங்-கரையிலும் ஒருவரோடொருவர் சண்டையிடாமல் வீட்டுக்கு வருவதே இல்லை.

இரண்டு வீட்டார்களும் அடிக்கடி கிராமாதிகாரி-யிடம் வழக்குத் தொடுத்துத் தகுந்த தண்டனையடைந்து வந்தார்கள்.

இவ்வாறு ஆறு வருஷங்கள் வரையிலும் அவர்-களுக்குள் இடை விடாமல் சண்டை சச்சரவுகள் நடந்துகொண்டே இருந்தன. கிழவன் தன்னுலான வரையில் அவர்களுக்குப் புத்தி சொல்லிப் பார்த்தான். ஒன்றும் பயன்படவில்லை. ஏழாம் வருஷம் அவ்வூரில் ஒரு கலியாணம் நடந்தது. அக்கலியாணத்தில் கோகி-லாம்பாள் பக்கத்து வீட்டுக் கந்தசாமி முதலியை இழி-வாகப் பேசினுள். அவன் அதைப் பொறுக்க இயலா-மல், அவளை நன்ருக அடித்தான். கருப்பவதியாக இருந்த கோகிலாம்பாள் அதனுல் ஒரு வாரம் வரையில் படுக்கையிற் கிடந்தாள். நாகரத்தின முதலி உடனே கந்தசாமி முதலியின்மேல் வழக்குத் தொடுத்தான். அவ்வழக்கில் கந்தசாமி முதலிக்குப் புளிய மிலாற்றி-னுல் இருபதடி கிடைத்தன.

கந்தசாமி முதலிக்கு முதுகில் பலத்த காயம் உண்டாயிற்று. அதனுல், அவன் முதுகு எரிச்சல்

அடைந்தது. அவனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அவன் நியாய ஸ்தலத்தை விட்டு வெளி வந்தவுடனே, நாகரத்தின முதலியைப் பார்த்து, "அடே! பாதகா, என் முதுகு எரியும்படி நீ அடி வாங்கி வைத்தாயல்லவா? இருக்கட்டும். நான் உன்னை இதோடு விட்டு-விட்டேன் என்று எண்ணாதே! என் முதுகு எரிவதைப்போல உன் வீடு எரிவதை நீ சீக்கிரத்தில் காண்பாய்! என்னிடத்தில் உன் வலிமை சிறிதும் செல்லாது! உன்னை ஒரு கை பார்க்காவிட்டால் என் பெயர் கந்தசாமி முதலி அன்று!" என்று வாயில் வந்தபடி வைதுகொண்டே தன் வீடு நோக்கிச் சென்றான்.

---

## 4. இரவீந்திர நாத தாகூர்

இரவீந்திர நாத தாகூர் என்னும் பெரியார், கி. பி. 1861-ஆம் வருஷம், மே மாதம், 6-ஆந் தேதி, கல்கத்தாவில் உள்ள தாகூர் குடும்பத்திற் பிறந்தார். தாகூர் குடும்பம் செல்வத்திற் சிறந்தது. அக்குடும்பத்தார் அனைவரும் பல விதமான கல்வித் துறைகளிற் சிறந்து விளங்கினர். பெண்களிற் சிலரும் பெரும்புலமை பெற்றிருந்தனர். அவர்கள் கவி பாடுந் திறமையிலும் சிறந்து விளங்கினார்கள். சிலர் இசை பாடுவதில் வல்லவராய் இருந்தனர். நாள் முழுவதும் தாகூர் குடும்பத்தில் இசைப் பயிற்சி நடைபெறும். இசை ஞானம் மிகுந்த சங்கீத வித்துவான்கள் தாகூர் வீட்டிற்கு அடிக்கடி வந்து, தமது இசை நலம் தோன்றப் பாடிப் பற்பல பரிசுகள் பெற்றுச் செல்வது வழக்கம். இரவீந்திரநாதர்

பெருங்கவிஞர் ஆனமைக்கு இந்த இசைப்பழக்கமே முதற் காரணம் என்று கூறலாம்.

இரவீந்திர நாத தாகூரின் தந்தையார் பெயர் மகரிஷி தேவேந்திர நாத தாகூர் என்பது. அவர் கல்வி,



அறிவு, ஒழுக்கம், தெய்வ பக்தி முதலிய சிறந்த குணங்கள் வாய்ந்தவர். அவர் சிற்சில சமயங்களில் கல்கத்தாவை விட்டு இமய மலை முதலிய வேறிடங்களுக்குச் சென்று வருவது வழக்கம். அப்பொழுது அவர்

புதல்வராகிய இரவீந்திர நாத தாகூரும் அவருடன் செல்லுவர். அதனுல், இயற்கைப் பொருள்களைக் கண்டு களிக்கும் தன்மை அவருக்கு உண்டாயிற்று. இனிய சோலைகளும், மரஞ் செடி கொடிகள் அடர்ந்த வனங்களும், பனிக் கட்டிகள் நிரம்பிய இமய மலையும், என்றும் நீர் வற்ருமல் ஓடிக்கொண்டே இருக்கும் புண்ணிய நதிகளும் அவருக்கு அளவில்லாத இன்பத்தை உண்டாக்கின. இயற்கைப் பொருட் காட்சியிஞல் ஏற்பட்ட பேரறிவே அவரை இயற்கைக் கவிஞர் ஆக்கிற்று என்று கூறலாம்.

இரவீந்திர நாத தாகூர் பள்ளிக்கூடங்களிலே சேர்ந்து கல்வி கற்பதை இளமையிலிருந்தே விரும்பவில்லை. அவரது இளமைப் பருவத்திலேயே அவருக்குச் சிறு சிறு கவிகளைப் படிப்பதிலும், பாடுவதிலும், தாமே சிற்சில சமயங்களில் வேடிக்கையான கவிகள் இயற்றுவதிலும் மனம் குடிகொண்டு இருந்தது. ஆனுல், அவர் இளமைப் பருவத்திற் பாடிய கவிகள் அவருடைய அறிவை விளக்கத் தகுந்தவை யல்ல.

இரவீந்திர நாத தாகூர் தமது இருபத்திரண்டாம் வயதிற்குமேல் பாடிய கவிகள் படிப்பவர்க்கு இன்பம் விளைக்கத் தகுந்தவை. அவர் சில நாடகக் கவிகளும் செய்தனர். பெண் மக்களின் அழகும், அன்பும், இயற்கையும், தேச பக்தியும் அவர் கவிகளுக்கு விஷயங்களாக அமைந்தன. மழைக் காலத்தில் காணப்படும் கரிய மேகங்களும், அக்காலத்தில் தோன்றும் பறவைகளும் அவற்றின் இனிய குரலும் கவிஞருக்கு இன்பம் விளைத்தன.

நம் கவிஞர் சாதனு என்னும் சஞ்சிகைக்குப் பத்திராசிரியரா யிருந்தார். அவர் அந்தச் சஞ்சிகையில் பல அரிய வியாசங்கள் எழுதி இருக்கின்றார். அந்த வியாசங்கள் அவருடைய அறிவின் திறத்தையும் புத்தியின் நுட்பத்தையும் அறிவிக்கின்றன.

இரவீந்திர நாத தாகூர் சிறந்த கவிஞராக விளங்குவதோடு, சிறு கதைகள் எழுதுவதிலும், நவீனக் கதைகள் இயற்றுவதிலும் மிகவும் வல்லவர். அவர் இயற்றிய கவிகளைப் போலவே அச்சிறு கதைகளும் நவீனங்களும் அவருக்குப் பெரும்புகழைத் தருவனவாகும். அவர் எழுதும் கட்டுக் கதைகள் படிப்பவர்களுக்குப் பல அருமையான கருத்துகளைக் கற்பித்துப் பெருமகிழ்ச்சியை உண்டாக்கும்.

நம் கவிஞர் கேட்போர்க்கு இன்பம் உண்டாகும்படி பேசும் பேச்சு வன்மையும் உடையவர். அவர், நமது தாய் நாடாகிய இந்தியாவின் முன்னேற்றத்தைப் பற்றிப் பல வியாசங்கள் எழுதி வெளியிட்டதோடு, சிற்சில இடங்களில் பேசியும் இருக்கின்றார்.

இரவீந்திர நாத தாகூர் இயற்றிய நூல்களில் கீதாஞ்சலி என்னும் நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பே அவருக்கிருக்கும் கவிப்புலமையை உலகத்தார் அறிந்து அவரைப் போற்றுவதற்குக் கருவி ஆயிற்று. அந்தச் சிறந்த நூல் 1913-ஆம் வருஷம் அவருக்கு உலக கவிஞர் என்னும் பெரும்பெயரையும், நோபேல் பரிசு என்னும் பெரும்பரிசையும் சம்பாதித்துக் கொடுத்தது.

நம் கவிஞர் உலக முழுதும் யாத்திரை செய்திருக்கின்றனர். அவர் பெயரும் புகழும் பரவாத இடம்

உலகத்தில் இல்லையென்றே சொல்லலாம். அவர் உலக யாத்திரை செய்த போது பல நாடுகளின் கல்வி முறைகளை ஆராய்ந்து, சிறந்த முறையில் கல்வி கற்பிப்பதற்காக, போல்பூர் என்னும் இடத்தில் 'சாந்தி நிகேதனம்' என்னும் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தி நடத்தி வருகிறார். இப்பொழுது அக்கல்லூரி 'விஸ்வ பாரதி' என்னும் பெயருடன் ஒரு சிறந்த சர்வகலாசாலையாக விளங்குகின்றது. கவிஞர் மேற்பார்வையில் கல்வி பயிலும் மாணவர் எல்லோரும் உயர்ந்த குணங்களைப் பெற்றுச் சிறந்து விளங்குகின்றனர்.

கவிஞரின் சிறப்பை அறிந்த அரசாங்கத்தார் அவருக்கு ஸர் என்னும் பட்டத்தை வழங்கினர். ஆயினும், அவர் 1919-ஆம் ஆண்டில் பஞ்சாபில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக அப்பட்டத்தை நீக்கிவிட்டார்.

அவர் 1920-ஆம் வருஷம் ஐந்தாம் முறை இங்கிலாந்திற்குச் சென்று, அங்கிருந்து பிரான்ஸ், அமெரிக்கா, டென்மார்க்கு, ஸ்வீடன், ஜெர்மனி முதலிய நாடுகளுக்குச் சென்று, பல பிரசங்கங்கள் செய்தனர். அவர் செய்த பிரசங்கங்களைக் கேட்க ஆயிரக்கணக்கான அறிஞர்கள் அவ்வவ்விடங்களில் கூடினார்கள். நம் கவிஞர், அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டு, தம் தாய் நாடாகிய இந்தியாவிற்குத் திரும்பினர்.

1931-ஆம் வருஷம் மே மாதம் 7-ஆந் தேதி காலை ஆறு மணிக்கு நம் கவிஞர் பெருமானுடைய எழுபதாம் ஆண்டு பிறந்த நாள் கொண்டாட்டம் சாந்தி நிகேதனம் என்னும் கல்லூரியில் பல விதச் சிறப்புகளுடன் கொண்டாடப்பட்டது. அச்சமயம் சீன தேசத்துப் புலவர்

ஒருவர் தம் பாஷையில் ஒரு கவி பாடி, நம் கவிஞரை வாழ்த்தினர்.

நம் கவிஞர் தம் தாய் மொழியாகிய வங்க பாஷையில் மிகுந்த பற்றுள்ளவர். அவர் தாம் இயற்றும் கவிகளையும் மற்ற நூல்களையும் முதலில் தம் தாய் மொழியிலேயே இயற்றுவது வழக்கம். பின்னர் அவற்றை ஆங்கில பாஷையில் மொழி பெயர்ப்பார். இப்படிப்பட்ட கவிஞர் பல்லாண்டு வாழ்ந்து நம் தாய் நாட்டைச் சிறப்பிக்கும்படி கடவுள் அருள் புரிவாராக.

---

## 5. 'தீராக் கோபம் போராய் முடியும்'—II

**நா**கரத்தின முதலியும் கந்தசாமி முதலியும் வீடு வந்து சேர்ந்தனர். நாகரத்தின முதலி வீட்டுக்குள் நுழைந்ததும் அவன் தகப்பனாகிய கிழவன், இருமிக்கொண்டே தன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, "நாகரத்தினம், வழக்குத் தீர இவ்வளவு நேரமாயிற்று? பொழுது போய்விட்டதே! வழக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டான்.

நாகரத்தினம்:—கந்தசாமிக்குப் புளிய மிலாற்றினால் இருபதடி கிடைத்தன.

கிழவன்:—நாகரத்தினம், நீ செய்வது மூடத்தனமான காரியம் என்பதை நீ உணரவில்லை. அவனுக்கு இருபதடி கிடைத்ததால் உனக்கு ஏற்பட்ட நன்மை என்ன?

நாகரத்தினம்:—அவன் இனி என் பேச்சுக்கு வர மாட்டான். அவன் என் மனைவியை அடித்தால் நான்

சும்மா இருப்பேனு? நான் ஆண் பிள்ளை அல்லவா? இப்பொழுது அவன் என் வீட்டையும் கொளுத்தி-விடுவதாகப் பயமுறுத்துகின்றான். அதையும் பார்த்து-விடுகிறேன்.

கிழவன்:—நாகரத்தினம், நீ உன் கோபத்தை அடக்க வேண்டும். ஒருவன் கோபித்தால், மற்றொரு-வன் அடங்கிப் போக வேண்டும். இதுவே பகையை ஒழிப்பதற்குத் தகுந்த வழி. நீ உன் குற்றத்தை மறந்து-விட்டாய்; அவன் குற்றத்தைப் பெரிதாகப் பாராட்டு-கிறாய். நானும் கந்தசாமியின் தகப்பனும் அண்ணன் தம்பிகளைப் போல வாழ்ந்து வந்தோம். நாங்கள் ஒரு-வருக்கொருவர் வேண்டிய உதவிகளைச் செய்துகொண்டு சுகமாக வாழ்ந்தோம். ஆனல், இப்பொழுது எங்கள் பிள்ளைகளாகிய நீங்கள், ஒருவரோடொருவர் அற்பக் காரணத்தினல் பகை கொண்டு, இந்தப் பாடு படுகிறீர்-கள். இஃது என்ன அறியாமை! நாம் நடப்பதைப் பார்த்தல்லவா நம்முடைய பிள்ளைகளும் நடக்க வேண்-டும்? முன் ஏர் கோணலாகச் சென்றால், பின் ஏர் எப்-படி நேரே செல்ல முடியும்? உங்கள் மூடத்தனத்தால் உங்கள் குழந்தைகளும் கெட்டுப் போகிறார்களே!

> "இன்னுசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல்."

என்ற பெரியோர் வாக்கை மறந்துவிடலாமா? சிறிது நேரம் யோசித்துப் பார்: இந்த வழக்குகளில் வீணிலே எவ்வளவு பொருள் செலவாயிற்று! நீ இந்த வழக்கு-களில் செலவழித்த காலத்தை நல்ல காரியங்களில் செல-வழித்து இருந்தால், எவ்வளவு நன்மை உண்டாயிருக்-

கும்! நாளுக்கு நாள் உன்னுடைய செல்வம் குறைந்து-கொண்டே வருவது உனக்குத் தெரியுமல்லவா? இனி இவ்வழக்குகளைப்பற்றி அடியோடு மறந்துவிடு; கந்த-சாமி முதலியிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக்கொள்; அவனை நம் வீட்டுக்கு அழைத்துவந்து விருந்து செய்.

கிழவன் இவ்வாறு செய்த பிரசங்கம் நாகரத்தின முதலியின் மனத்தை மாற்றிவிட்டது. அவன் கிழவன் சொல்லியபடியே இனி நடப்பதாகக் கூறிச் சென்று, தன் மாடு கன்றுகளைக் கவனித்தான். இருள் எங்கும் சூழ்ந்தது. நாகரத்தின முதலி வேலையை முடித்துக்-கொண்டு வீட்டில் நுழையும் போது பக்கத்து வீட்டுப் புறக்கடையில் கந்தசாமி முதலி பேசும் சத்தம் அவனுக்-குக் கேட்டது. அவன் கந்தசாமி முதலி பேசுவதை உற்றுக் கேட்டான். கந்தசாமி முதலி, "என்னிடத்தி-லகப்பட்டவன் தப்புவானு! பொழுது விடிவதற்குள் நான் எப்படிப்பட்டவன் என்பதை நாகரத்தின முத-லிக்குக் காட்டிவிடுகிறேன் !" என்று கூறிக் கனைத்தான். நாகரத்தின முதலி பெருங்கோபத்துடன் தன் வீட்டுக்-குள் நுழைந்து, கை கால்களை அலம்பிக்கொண்டு, சாப்-பிட்டான்.

பிறகு நாகரத்தின முதலி வீட்டார் அனைவரும் படுத்துத் தூங்க ஆரம்பித்தனர். நாகரத்தின முதலிக்கு மட்டும் தூக்கம் பிடிக்கவில்லை. அவன் படுக்கையில் படுத்துச் சிறிது நேரம் புரண்டான். கந்தசாமியின் கடுமொழிகள் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தன. ஆகையால், அவன் படுக்கையை விட்டு எழுந்து, புறக்கடைக்கு ஓசை செய்யாமல் சென்றான்.

அப்பொழுது அவன் வீட்டுப் புறக்கடையில் இருந்த வைக்கோற் போரின் அருகில் யாரோ நெருப்புக் குச்சி கிழிப்பது போல அவனுக்குத் தோன்றியது. அவன் மெள்ள நடந்து போருக்கு அருகில் சென்றான். அதற்குள் போரில் தீப்பிடித்துக்கொண்டது. அந்தத் தீயின் வெளிச்சத்தில் கந்தசாமி முதலி நிற்பது அவனுக்கு



நன்றாகத் தெரிந்தது. உடனே அவன் கந்தசாமி முதலியின் மேல் பாய்ந்தான். கந்தசாமி முதலி அவனை ஓங்கிக் குத்தித் தரையில் வீழ்த்திவிட்டுத் தன் வீட்டுக்குள் நுழைந்துவிட்டான்.

பிறகு நாகரத்தினமுதலி மூர்ச்சை தெளிந்து எழுந்திருப்பதற்குள் வைக்கோற் போர் முழுவதும் எரிய ஆரம்பித்து, அவன் குடிசையிலும் தீப்பற்றிக்கொண்டது. அவன் அதைக் கண்டு பெருங்கூச்சலிட்டான். உடனே அயல் வீட்டார்கள் விழித்துக்கொண்டு ஓடி வந்து, அவன் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தவர்களை-

யும் தள்ளாத கிழவனையும் மாடு கன்றுகளையும் வெளிப்படுத்திவிட்டார்கள். பிறகு நாகரத்தின முதலியின் குடிசை வீட்டில் பிடித்த தீ, கந்தசாமி முதலியின் குடிசையிலும் பிடித்துக்கொண்டது. உடனே அவன் வீட்டிலிருந்தவர்களும் வெளிப்படுத்தப்பட்டார்கள். அன்று காற்று அதிகமாக வீசினதால், தீயானது விரைவாகப் பரவி, அந்தத் தெருவிலிருந்த குடிசைகளில் பாதியை அழித்துவிட்டது. ஜனங்கள் நாகரத்தின முதலியையும் கந்தசாமி முதலியையும் தங்கள் வாயில் வந்தபடி நிந்தித்தார்கள்.

பிறகு கிழவன் தன் மைந்தனைக் கூப்பிட்டு, "அப்பா, நான் இறக்கப் போகிறேன். இனியாவது நீ என் புத்தி மதியைக் கவனித்து நடந்துகொள்," என்று சொல்லித் தன் கண்களை மூடிவிட்டான். நாகரத்தின முதலி, துன்பம் பொறுக்க முடியாமல், வாய் விட்டு அழுதான்; தன் தகப்பன் சொல்லியபடியே உடனே கந்தசாமி முதலியினிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். கந்தசாமி முதலியும் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். பிறகு அவர்கள் கிழவனைத் தகனம் செய்துவிட்டுப் புதிய குடிசைகளை அமைத்துக்கொண்டு மிகுந்த சினேகத்தோடு, கிழவன் கட்டளைப்படியே, அண்ணன் தம்பிகளைப்போல வாழ்ந்து வந்தார்கள்.

## 6. சிலந்திப் பூச்சியின் திறமை

உலகத்தில் உள்ள உயிர் வகைகளுள் ஒவ்வொன்றும் கடவுளின் படைப்பின் மேன்மையை ஒவ்வொரு முறையில் உணர்த்துவதை நாம் பார்த்து வருகிறோம். விலங்குகள் பல அற்புதமான தொழில்களைச் செய்கின்றன. பறவைகள் அருமையான கூடுகளைக் கட்டி வாழ்கின்றன. எறும்பு தேனீ முதலியவை மனிதர்களாகிய நாம் கண்டு வியக்கும்படியான தொழில்களைச் செய்கின்றன.

உயிர் வகைகளில் சில கூட்டம் கூட்டமாக இருந்து தொழில் செய்கின்றன; சில தனித்து இருந்து தொழில் புரிகின்றன. எறும்பு தேனீ முதலியவை கூட்டங் கூட்டமாக இருந்து தொழில் செய்யப் பார்க்கிறோம். அவை தனித்து இருக்க நேரிடுமானால், ஒரு தொழிலும் செய்ய இயலாமல் வருந்தி இறந்து போகும்.

சிலந்திப் பூச்சியானது தனியே இருந்து தொழில் செய்யும் வல்லமையுடையது. அது செய்யுந் தொழில் வியப்பை உண்டாக்க வல்லது. அப்பூச்சி இயற்கையில் போர் புரியும் தன்மை வாய்ந்தது. அது தன் இனத்துப் பூச்சியோடும் மற்ற இனத்துப் பூச்சிகளோடும் எப்பொழுதும் போர் செய்துகொண்டே இருக்கிறது. அதன் உடல் அமைப்பு அதன் குணத்திற்கும் செயலுக்கும் தகுந்தபடி இயற்கையில் அமைந்திருக்கின்றது. அதன் தலையும் மார்பும் இயற்கையில் மற்றப் பூச்சிகளால் தாக்க இயலாதபடி அமைந்திருக்கின்றன. அதன் வயிறு குளவி முதலிய பூச்சிகள் கொட்டினாலும் துன்பம் உண்டாகாதபடி இரப்பரைப் போன்ற மெல்லிய

தோலால் மூடப்பட்டிருக்கிறது. அதன் கால்களின் நுனியில் வலிய நகங்கள் அமைந்திருக்கின்றன. அந்தக் கால்கள் ஈட்டிகளைப் போல நீண்டு இருப்பதால், சிலந்தி தன் விரோதிகள் தன்னை நெருங்காதபடி செய்துகொள்-ளப் பயன்படுகின்றன. சிலந்தியின் கண்கள் பெரியவை-யாகவும் பளபளப்புள்ளவையாகவும் இருக்கின்றன. சிலந்தியின் வாய்க்கு மேற்புறத்தில் குறடு போன்ற ஒரு கருவி அமைந்திருக்கின்றது. இக்கருவியின் உதவியால், சிலந்தி தன் வலையில் அகப்பட்ட பூச்சியைக் கொல்-கிறது.

சிலந்தியின் வலை அதன் விரோதிகளை அகப்படச் செய்யத் தக்கதாக அமைக்கப்படுகின்றது. சிலந்தியின் உடலில் ஒரு விதப் பசை அமைந்திருக்கிறது. சிலந்தி அந்தப் பசையைத் தன் ஆசனத்தின் மூலமாக வெளியே கொண்டு வந்து, அதை மெல்லிய நூல் போலத் திரித்து, வலை பின்னுகிறது. அது வலை பின்னும்போது அந்தப் பசையில் ஒரு துளியைச் சுவரில் சிந்துகிறது. அப்பசை இறுகி, அதிலிருந்து தொடங்கிப் பின்னப்படும் வலை-யின் மயிரிழை போன்ற நூல்களை மிகவும் உறுதியாகப் பிடித்துக்கொள்ளுகிறது. சிலந்தி அதிலிருந்து தொடங்-கித் திரித்த இழையை மற்றொரு பக்கத்தில் முன் மாதி-ரியே பதியச் செய்கிறது. இப்படிப் பல இழைகளை நேர் நேராக அமைத்த பிறகு அவற்றின் குறுக்கே பல இழை-களை அமைத்து வலையை முடிக்கிறது.

மூன்று நாட்களில் வலை முடிவடைகிறது. பிறகு சிலந்தி அவ்வலை உறுதியாக இருக்கிறதா என்பதைப் பலமுறை சோதித்த பிறகே அவ்வலையின் நடுவில் உள்ள

துவாரமொன்றில் குடிபுகுந்து அடிக்கடி வெளியே வருவதும் உள்ளே போவதுமாக இருக்கிறது. வேறு சிலந்தி அவ்வலையிற் குடி புக வருமானல், வலையிலுள்ள சிலந்தி அதனோடு நெடுநேரம் போர் செய்து, அதைத் துரத்திவிடுகின்றது; சில சமயங்களில் அதைக் கொன்றுவிடுவதுமுண்டு.



ஓர் ஆங்கில அறிஞர் தாம் கண்ட ஒரு சிலந்தியின் திறமையைப் பின் வருமாறு சொல்லியிருக்கிறார் :

"நான் என் வீட்டில் ஒரு சிலந்தியைக் கண்டேன். அது தன் விரோதியைச் சண்டையிட்டுக் கொன்ற பிறகு, அந்தச் சண்டையில் பழுதுபட்ட தன் வலையை மூன்று நாள் வரையில், இரையும் கொள்ளாமல், சீர்-

திருத்திக்கொண்டிருந்தது. பிறகு அவ்வலையில் ஓர் ஈ அகப்பட்டுக்கொண்டு, தப்பிச் செல்ல இயலாமல், திண்டாடிற்று. உடனே சிலந்தி அதைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய்விட்டது.

"அச்சிலந்தி அந்த ஈயைத் தின்ற பிறகு ஒரு வாரம் வரையிலும் வேறு இரை கொள்ளவே இல்லை. நான் ஒரு முறை அதன் வலையில் ஒரு குளவியை வைத்தேன். சிலந்தி அதைக் கண்டதும் தன் வலையை அறுத்து அதை விடுவித்துவிட்டது. குளவி பறந்து போனதும் சிலந்தி வலையை முன்போலச் சீர்திருத்தும் என்று நான் எண்ணினேன். ஆனால், அவ்வலை சீர்திருத்த முடியாத நிலையில் இருந்ததால், சிலந்தி அதை விட்டுவிட்டு, வேறு ஒரு வலையமைக்கத் தொடங்கி, மூன்று நாட்களில் அதைச் செய்து முடித்தது.

"பிறகு நான் ஒரு சிலந்தி எத்தனை வலை அமைக்கக் கூடும் என்பதை அறிய எண்ணி, அந்த வலையை அழித்துவிட்டேன். உடனே அது மற்றொரு வலையைப் பின்ன ஆரம்பித்துப் பின்னி முடித்தது. நான் அதையும் அழித்துவிட்டேன். பிறகு அதனால் வேறு வலை பின்ன இயலவில்லை. பிறகு அது தன் கால்களைப் பந்துபோலச் சுருட்டிக்கொண்டு சில மணிநேரம் வரையில் அசையாமற் கிடந்தது. அப்பொழுது ஓர் ஈ அதன் அருகில் வர, உடனே அது தன் கால்களை நீட்டி அந்த ஈயைப் பிடித்துக்கொண்டது.

"பிறகு அச்சிலந்தி, இப்படி வாழ்வதில் விருப்பம் இல்லாதது போல, வேறு ஒரு சிலந்தியின் வலைக்குச் சென்று, அந்தச் சிலந்தியோடு போர் செய்து, அதை

ஓட்டிவிட முயன்றது. ஆனால், முதல் முறை அது தோற்றுப் போயிற்று. அந்தத் தோல்வியினால் அது மனந் தளராமல், வேறு ஒரு சிலந்தியின் வலைக்குச் சென்று, அச்சிலந்தியோடு மூன்று நாள் வரையில் போர் செய்து, அதைக் கொன்றுவிட்டு, அவ்வலையில் குடி புகுந்தது. அது அவ்வலையில் அகப்பட்டுக்கொள்ளும் சிறு பூச்சிகளை உடனே பிடிப்பதில்லை. அப்பூச்சிகள் நெடுநேரம் முயன்று சோர்ந்த பிறகே அஃது அவற்றைப் பிடித்துத் தின்பது வழக்கம்.

"நான் கண்ட அச்சிலந்தி மூன்று வருஷம் வரையில் உயிரோடு இருந்தது. ஒவ்வொரு வருஷமும் அதன் தோல் மாறிக்கொண்டேயிருந்தது; புதிய கால்களும் உண்டாகிக்கொண்டிருந்தன. நான் ஒரு முறை அதன் கால்களில் ஒன்றைப் பிடுங்கி எறிந்துவிட்டேன். அக்கால் மூன்று நாட்களில் முன் இருந்தது போலவே வளர்ந்துவிட்டது."

ஆண் சிலந்தி பெண் சிலந்தியைவிடச் சிறியது. பெண் சிலந்தி முட்டையிடும். பெண் சிலந்தி தான் இடும் முட்டைகளைப் பசை நூலால் பந்து போலச் சுற்றி மூடிவிடுகிறது; பிறகு அதைத் தன் கூட்டில் வைத்துக் குஞ்சு பொரிக்கிறது. அது கூட்டில் உள்ளபோது ஏதேனும் தீங்கு நேரிட்டால், முட்டையை எடுத்துக்கொண்டு வெளியே ஓடிவிடுகிறது.

சிலந்திக் குஞ்சுகள் வெகு விரைவில் வளர்ந்து இரை தேடத் தொடங்கிவிடுகின்றன. அவை ஓரளவு வளர்ந்ததும் அவற்றின் உடல் வளர்ச்சி நின்றுவிடுகிறது; கால்கள் மட்டும் வளர்கின்றன. கிழப் பருவமடைந்ததும் சிலந்தி இரை தேட இயலாமல் வருந்தி இறந்து போகின்றது.

# 7. பேராசையின் பயன்

அமராவதி என்னும் நகரத்தில் இன்பமாக வாழ்ந்து வந்த வேதியர் நால்வர், வறுமை யடைந்து, அதனல் மிகவும் துன்பப்பட்டனர். அந்நால்வரும், "இப்போது நாம் அடைந்துள்ள தரித்திரத்தை நீக்கிக்கொள்ள ஒரு வழி தேட வேண்டும். இதன் பொருட்டு நாம் நிரம்பப் பொருள் சம்பாதிப்பதற்கு ஏற்ற இடத்திற்குச் சென்று பொருள் தேட வேண்டும். பொருள் இல்லாதவர்களுக்குக் காட்டில் சென்று வாழ்வதைக்காட்டிலும் சந்தோஷத்தைத் தரத் தகுந்த காரியம் வேறு இல்லே," என்று எண்ணி, அயலூர்க்குச் செல்ல முடிவு செய்தனர்.

பிறகு அந்த நால்வரும் அமராவதி நகரத்தை விட்டுப் புறப்பட்டு, மறு தேசத்தை நோக்கிப் போய்க்கொண்டு இருந்தனர்; போகும்போது வழியில் ஒரு நதிக் கரையில் பைரவானந்தி எனும் ஒரு யோகியைக் கண்டு, அவ்யோகியின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். அந்த யோகி, அவர்கள்மீது இரக்கங் கொண்டு, "அன்பர்களே, நீங்கள் இவ்விடம் வந்து என்னே வணங்கினதற்குக் காரணம் என்ன ?" என்று கேட்க, அவர்கள், "முனிவரே, நாங்கள் வறுமையால் மிகவும் வாடுகின்றேம். ஆகையால், அதை ஒழிக்கத் தகுந்த பொருளேச் சம்பாதிக்கக் கருதி, எங்கள் நாட்டை விட்டுப் புறப்பட்டோம். ஆனல், கஷ்டப்படாமலும் உம்மைப் போன்ற பெரியோரின் ஆசீர்வாதத்தைப் பெருமலும் பொருள் சம்பாதிப்பது இயலாது. ஆகையினல்,

இதன் பொருட்டு இறக்கும் வரையில் முயற்சி செய்ய வேண்டும் என்று எண்ணி உம்மைச் சரணம் அடைந்தோம்; நீர் எங்கள் விருப்பத்தை முடித்து வைக்க வேண்டுகிறோம். நீர் அப்படிச் செய்ய மறுத்தால், எங்கள் உயிரை உம்மிடத்தில் விட்டுவிடுவோம்," என்று கூறி, கை கட்டிப் பணிவுடன் நின்றார்கள்.

அந்த யோகி அவர்கள் பரபரப்பையும் மன உறுதியையும் உணர்ந்து, நான்கு பேர் தலையின்மீதும் ஒவ்வொரு திரிச்சிலையை வைத்து, அவர்களைநோக்கி, "அன்பர்களே, நீங்கள் இமய மலையை நோக்கிச் செல்லுங்கள்; போகும்போது வழி தப்பிப் போகாதீர்கள். நீங்கள் போகும் சரியான வழியில் எவன் தலைத் திரி எங்கே விழுமோ, அவனுக்கு அங்கே பொருள் கிடைக்கும்," என்று சொல்லி அனுப்பினான்.

பின்பு, அந்தணர் நால்வரும் யோகியின் கட்டளைப்படியே இமய மலையை நோக்கிக் குறிப்பிட்ட வழியே நடந்தனர். சிறிது தூரம் சென்றதும் ஒருவன் தலைத் திரி பூமியில் விழுந்தது. உடனே அவன் அவ்விடத்தைத் தோண்டிப் பார்த்தான். அங்கு ஏராளமான செம்பு இருப்பதைக் கண்டு, அவன் மற்ற மூவரையும் நோக்கி, "நண்பர்களே, இவ்விடத்தில் உள்ள செம்பில் நமக்கு வேண்டும் அளவு நாம் வாரிச் செல்லலாம்; வாருங்கள்," என்று கூறினன். அதைக் கேட்ட அவர்கள், "பேதாய், இதனல் நமக்கு என்ன பயன்? இதில் எவ்வளவு எடுத்துக்கொண்டு போனலும் நமது வறுமை சிறிதும் நீங்காது. ஆதலால், நாங்கள் இன்னம் சிறிது தூரம் முன்னே சென்று பார்ப்போம்,"

என்று சொல்லி நடந்தார்கள். பிறகு அவன் தன்னால் சுமக்கக் கூடிய அளவு செம்பை வாரிக்கொண்டு, அமராவதி நகரத்திற்குத் திரும்பிச் சென்றான்.

மற்ற மூவரும் பின்னும் சிறிது தூரம் போனதும் அங்கு மற்றொருவன் தலைத் திரி பூமியில் விழுந்தது. உடனே அவன் அவ்விடத்தில் தோண்டிப் பார்த்தான். அங்கு ஏராளமான வெள்ளி இருக்கக் கண்டு, அவன் மற்ற இருவரையும் பார்த்து, "நண்பர்களே, நாம் இந்த வெள்ளியில் வேண்டும் அளவு எடுத்துக்கொண்டு நம் இருப்பிடம் போவோம். வாருங்கள்," என்று மிகுந்த மகிழ்ச்சியோடு கூறினான். அவ்விருவரும், "இன்னஞ் சிறிது தூரம் சென்றால் பொன் கிடைக்கும். ஆகையால், நாங்கள் போகிறோம். நீ இந்த வெள்ளியைக் கொண்டு போ," என்று சொல்லி, அப்பால் நடந்தார்கள். பின்பு அவன், வெள்ளியில் வேண்டும் அளவு வாரிக்கொண்டு, தன் ஊருக்குத் திரும்பினான்.

மற்ற இருவரும் பின்னுஞ் சிறிது தூரம் சென்றதும், ஒருவன் தலைத் திரி நிலத்தில் வீழ்ந்தது. அவன் அந்த இடத்தைத் தோண்டிப் பொன் இருக்கக் கண்டு, மற்றவனை நோக்கி, "நண்பா, உலோக வகைகளில் சிறந்தது பொன் அல்லவா? ஆகையால், நாம் இதில் நமக்கு வேண்டும் அளவு வாரிக்கொண்டு நம் ஊருக்குச் செல்வோம்," என்றனன். ஆனால், பேராசைப் பேயன் ஆகிய நாலாவான், அவன் சொல்லைக் கேளாமல், "அறிவில்லாதவனே, இன்னஞ் சிறிது தூரம் சென்றால் இரத்தினங்கள் கிடைக்கும். ஆகையால், நான் போகிறேன்," என்று கூற, மற்றவன், "அப்படியானால், நான் இங்-

கேயே நீ வருமளவுங் காத்திருப்பேன். நீ சீக்கிரம் திரும்பி வா,'' என்று கூறி, அங்கேயே இருந்தான்.

பின்பு பேராசைப் பேயன் தனியே நடந்து போகையில், பசியுந் தாகமும் அதிகரிக்கவே, தான் செல்ல வேண்டிய வழியைத் தவறி, வேறு வழியாகச் சென்று,



ஓர் இடத்தில் ஓர் அதிசயத்தைக் கண்டான்: அங்கு ஒரு மனிதன் தலையில் ஒரு சக்கரம் சுழன்றுகொண்டே இருந்தது. அவன் உடல் முழுதும் இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. பேராசைப் பேயன் அதைக் கண்டு நடுநடுங்கி, அந்தச் சக்கரத் தலையனை நோக்கி, "ஐயா, நீ யார்? இந்தச் சக்கரம் உன் தலையில் சுழலக் காரணம் என்ன?'' என்று கேட்டான். உடனே, அந்தச் சக்கரம்

அவன் தலையில் அமைந்து சுழல ஆரம்பித்தது. உடனே அவன் திடுக்கிட்டு, "ஐயோ! இஃது என்ன கொடுமை! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற்போல ஆயிற்றே! —ஐயா, இதன் வரலாறு என்ன?" என்று கேட்க, பழைய சக்கரத் தலையன், "ஐயா, இங்கு ஒருவரும் வந்து தன்பொருளைக் கொண்டு போகாதபடி குபேரனால் இந்தச் சக்கரம் காவலாக அமைக்கப்பட்டிருக்கிறது. நான், நெடுங்காலத்திற்குமுன் பொருளாசையால் இங்கு வந்து, இச்சக்கரத்தால் பிடிபட்டேன். பிறகு மற்றொருவன் இங்கு வந்தால் இச்சக்கரம் அவன் தலையை அடையுமென்று குபேரன் எனக்கு ஒரு வரமளித்தான். இப்பொழுது அப்படியே ஆயிற்று. இங்குப் பசியுந் தாகமும் உண்டாகா. நான் போய் வருகிறேன்," என்று கூறிப் போய்விட்டான்.

பேராசைப் பேயனை எதிர் பார்த்துக் காத்துக்கொண்டிருந்தவன், நெடு நேரம் அவன் வராமையால் அவனிடம் வந்து, நடந்ததை அறிந்து, "நண்பனே, இது பேராசையின் பயன். நான் என்ன செய்வேன்!" என்று சொல்லி, வருத்தத்துடன் தான் பெற்ற பொன்னோடு அமராவதி நகரத்தை அடைந்தான்.

---

## 8. தாமஸ் ஆல்வா எடிசன்

**தா**மஸ் ஆல்வா எடிசன் என்பவர், அமெரிக்காவில் ஓஹியோ என்னும் நாட்டில் உள்ள மிலான் என்னும் பட்டினத்தில், 1847-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் பிறந்தார். அவர் தந்தையார் சாமுவேல் எடிசன் என்பவர். அவர் டச்சுக் குடும்பத்தைச் சேர்ந்தவர். காட்சுக் குடும்-

பத்தைச் சேர்ந்த நான்ஸி எலியட்டு என்பவர் ஆல்வா எடிசனுக்குத் தாயார். அந்த அம்மையார் கல்வி கற்றவர். வறுமையின் கொடுமையால் தாமஸ் ஆல்வா எடிசன் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து கல்வி கற்க இயலவில்லை. அதனால், அவர் தாயாரே அவருக்குக் கல்வி கற்பித்து வந்தார்.



எடிசன் ஏழு வயதிலேயே சம்பளத்திற்கு வேலை செய்ய நேரிட்டது. சில ஆண்டுகளுக்குப் பின் அவர் கிராண்டு டிரங்கு இரயில்வேயில்* வர்த்தமானப் பத்திரிகை விற்று வரலானர்; ஓய்வு நேரங்களில் இரசாயன நூல்களைப் படித்து, அவைகளில் சொல்லப்பட்ட விஷயங்களைத் தாமே பரீட்சித்து வந்தார்.

எடிசன் பத்திரிகை விற்பதால் கிடைத்த இலாபத்தைக்கொண்டு தாமே ஒரு வர்த்தமானப் பத்திரிகையை எழுதி, தாமே அச்சிட்டு, தாமே விற்று வந்தார். அந்தப்

* Grand Trunk Railway

பத்திரிகை நன்றாக விலையாவதைக் கண்டு, அவர் தம்மையொத்த ஒரு சிறுவருடன் சேர்ந்து, மற்றொரு பத்திரிகையும் வெளியிட்டார்.

சிறுவர் இருவரும், உலக அனுபவம் இல்லாமையால், தம் மனம் போனபடி அந்தப் பத்திரிகைகளில் விஷயங்களை எழுதி வந்தனர். ஒரு நாள் எடிசன் எழுதிய ஒரு விஷயம் சந்தாதாரர் ஒருவருக்கு மன வருத்தத்தை உண்டு பண்ணியது. அந்தச் சந்தாதாரர் எடிசனுக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று எண்ணினார். ஒரு நாள் எடிசன் ஓர் ஆற்றங்கரையோரமாகச் செல்கையில் அந்தச் சந்தாதாரர், அவரை வாயில் வந்தபடி வைது, தூக்கி ஆற்றில் எறிந்தார். எடிசனுக்கு நீந்தத் தெரியுமாதலால், அவர் மரணமடையாமல், நீந்திக் கரையேறினார். அதனால், அவர் பத்திரிகை வெளியிடுவதை நிறுத்திவிட்டார்.

எடிசன் பழையபடி பத்திரிகை விற்று வரலானார். அவர் இரயிலிலேயே ஒரு சிறு அறையில் இருந்து பத்திரிகை விற்பதும் இரசாயனப் பரீட்சைகள் செய்வதும் வழக்கம். ஒரு நாள் இரயில் ஓடும்போது அவர் இரசாயனப் பரீட்சை செய்துகொண்டு இருந்தார். ஓடும் வேகத்தால் வண்டி அசைந்து, தீப் பாஷாணக் குப்பி ஒன்று தவறி விழுந்து,வண்டியில் நெருப்புப் பிடித்தது. உடனே அந்த வண்டியில் இருந்த காவலன் * ஓடி வந்து, எடிசனைக் கோபத்தோடு தாடையில் ஓர் அறை அறைந்து, அவரைக் கீழே தள்ளிவிட்டு, அவர் சாமான்களையும் எடுத்து வெளியே எறிந்தான். காவலன்

* Guard

தாடையில் அறைந்ததால் எடிசனுக்கு ஒரு காது செவிடாகவே போய்விட்டது. அது முதல் எடிசன் பத்திரிகை விற்கும் நேரம் போக மற்ற நேரங்களிலெல்லாம் தம் வீட்டிலேயே இரசாயனப் பரீட்சைகளைச் செய்து வந்தார்.

ஒவ்வொரு நாளும் புகை வண்டி கிளேமான்ஸ் மலை * என்னுமிடத்தில் அரை மணி நேரம் நிற்பது வழக்கம். அப்பொழுது எடிசன் அந்த இடத்திலுள்ள புகை வண்டி நிலையக் காரியஸ்தர் ‡ மைந்தனை ஒரு சிறுவனோடு விளையாடுவது வழக்கம். ஒரு நாள் அங்கு வண்டி நின்றதும் எடிசன் பத்திரிகைகளை வைத்துக்கொண்டு ஒரு பக்கத்தில் நின்றுகொண்டு இருந்தார். அப்பொழுது ஓர் இஞ்சின் சாமான் வண்டிகளைப் பின் புறமாகத் தள்ளிக்கொண்டு இருந்தது. சிறுவன் அதைக் கவனியாமல் அது வரும் வழியில் விளையாடிக்கொண்டு இருந்தான். சிறிது நேரம் எடிசன் கவனியாமல் இருந்தால், சிறுவன் மாண்டு போயிருப்பான். எடிசன் விரைந்து ஓடி அவனைத் தூக்கிக்கொண்டு திரும்பும்போது காலிடறி, இருப்புப் பாதைக்கு அப்புறம் விழுந்தார். ஆபத்து ஒன்றும் நேரிடவில்லை. ஆயினும், எடிசனுடைய பாதரட்சை ஒன்று தண்டவாளத்தில் வண்டியின்கீழ் அகப்பட்டுச் சிதைந்தது.

இந்தச் செய்கை எடிசனுக்கு ஒரு பெரிய நன்மையைச் செய்தது: சிறுவனுடைய தகப்பனார் எடிசனிடம் மிகுந்த அன்பு கொண்டு, அவருக்குத் தந்தி யடிக்கக்

---

* Mount Clemons

‡ Station agent

கற்றுக் கொடுத்தார். எடிசன் பத்து நாட்களில் தந்தி-யடிக்கப் பழகி, அவ்வேலையில் அமர்ந்து, பல இடங்-களில் வேலை செய்தார். அவர் வேலை செய்துகொண்டே, தமது புத்தி நுட்பத்தால் அற்புதமான பல கருவிகளைக் கண்டு பிடித்துச் செய்து, அவற்றை நியூ யார்க்கு * என்னுமிடத்தில் இருந்த ஒரு தொழிற்சாலை அதிகாரி-களுக்கு நாற்பதினாயிரம் டாலர்களுக்கு விற்றார்.

பிறகு அவர் அந்தத் தொகையைக் கொண்டு, சொந்தமாக ஓர் இரசாயனப் பரீட்சைச் சாலையையும், தொழிற்சாலையையும் ஏற்படுத்தி, பல நுட்பமான அற்-புதக் கருவிகளைக் கண்டு பிடித்தார். அவர் 1873-ஆம் வருடம் தமது 26-ஆம் வயதில், ஒரு பெரிய தொழிற்-சாலைக்குத் தலைவரானார். பின்பு அவருடைய முயற்சி-களும் ஆராய்ச்சிகளும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்-டே வந்தன. அதனால், அவர் அவ்விடத்தை விட்டு, 1886-ஆம் வருடம் நியூ ஜெர்ஸி † என்னும் இடத்தில் உள்ள ஆரஞ்சு மலைகளின் அடிவாரத்தில் கட்டப்பட்ட ஓர் உன்னத மாளிகையிற் குடியேறினார்.

எடிசனிடம் மேரி இ. ஸ்டில்வெல் என்னும் ஓர் அம்மையார் வேலையிலிருந்தார். அவ்வம்மையார் நற்-குணம் உடையவர். எடிசன் அந்த அம்மையாரை 1873-ஆம் ஆண்டில் கலியாணம் செய்துகொண்டார். அந்த அம்மையார் மூன்று குழந்தைகளைப் பெற்ற பின்பு 1881-ஆம் வருடம் இறந்தார். எடிசன் மறு முறையும் கலியாணம் செய்துகொண்டார். அவரு-

* New York † New Jersey

டைய இரண்டாம் மனைவியார் ஒரு பெண் குழந்தையையும் ஓர் ஆண் குழந்தையையும் பெற்றார்.

எடிசனுடைய புத்தி நுட்பத்தினாலும் பெரிய உழைப்பாலும் வெளி வந்த அற்புதப் பொருள்கள் மிகப் பல. அவற்றுள் முக்கியமானவை போனகிராப்பு என்னும் ஒலிக் கருவி, மின்சார விளக்கு, மின்சார யந்திரம், கிராமபோன் தட்டுகள், டேலிபோன், இயங்குபடக் காட்சி, பேசும் படக் காட்சி என்பவை. இப்படிப்பட்ட அருமையான பொருள்களைக் கண்டு பிடித்து, உலகத்தாருக்கு உதவி செய்த பெரியார், 1931-ஆம் வருடம், அக்டோபர் மாதம், 18-ஆம் தேதி, தமது 84-ஆம் வயதில், இவ்வுலகை விட்டு நீங்கினார். ஆயினும், அவருடைய புகழுடம்பு இவ்வுலகில் என்றும் நிலைத்திருக்கும் அல்லவா?

---

## 9. பழியோரிடம் பாவமோரிடம்

பல வருஷங்களுக்கு முன் மதுரை நகரில் குலோத்துங்க பாண்டியன் என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் சிவபெருமானிடத்தில் மிகுந்த அன்பு உடையவன். அவன் அன்பைக் கண்டறிந்த கடவுளும் அவனுக்குப் பல வழிகளில் துணை செய்து வந்தார்.

ஒரு நாள் திருப்புத்தூர் என்னும் ஊரில் இருந்த ஒரு பிராமணன், தன் மனைவியோடும் கைக் குழந்தையோடும் மதுரையில் இருந்த தன் மாமனார் வீட்டுக்குக் காட்டின் வழியே வந்துகொண்டு இருந்தான். நடுக் காட்டை அடைந்ததும், அவன் மனைவி தாகத்தால் வருந்தினாள்.



அதனால், அவன் அவளை அங்கு இருந்த ஓர் ஆல மரத்தின்கீழ் உட்காரச் செய்து, தண்ணீர் கொண்டு வரச் சென்றான். பார்ப்பனி அம்மரத்தின் கீழ்ப் படுத்து இளைப்பாறிக்கொண்டிருந்தாள். அப்பொழுது ஒரு வேடன், வெயிலில் காடு முழுவதும் அலைந்து திரிந்து, வேட்டை ஒன்றும் அகப்படாததால், வில்லுங் கையுமாய் அம்மரத்தின்கீழ் வந்து தங்கினான்.

நீர் கொண்டுவரப் போன பிராமணன், நீருடன் திரும்பி வந்தான். அப்பொழுது அவன் மனைவி, வயிற்றில் அம்பு பாய்ந்து, இரத்தம் பெருக இறந்து கிடந்தாள். பிராமணன் அதைக் கண்டு திடுக்கிட்டு, "ஐயோ! இஃது என்ன கொடுமை! இவளை யார் கொன்றனரோ!" என்று எண்ணி, நாற்புறமும் பார்த்தான். சிறிது தூரத்தில் தன் விதியை நினைத்துநின்றுகொண்டிருந்த வேடன் அவன் கண்ணுக்குப் புலப்பட்டான். உடனே பிராமணன் அந்த வேடனே தன் மனைவியைக் கொன்றவன் என்று எண்ணி, அவனைப் பிடித்துக்கொண்டு, "அடா! பாவி, நீயே என் மனைவியைக் கொன்றாய். ஆகையால், நான் உன்னை விடமாட்டேன். நீ என்னோடு பாண்டிய அரசனிடம் வரவேண்டும்," என்று கூறினான். வேடன் ஒன்றும் பேசத் தோன்றாமல் மௌனமாய் நின்றான். பிராமணன் தன் குழந்தையை இடுப்பிலும் இறந்த மனைவியை முதுகிலுஞ் சுமந்துகொண்டு, வேடனோடு மதுரையை அடைந்தான்.

அவன் குலோத்துங்கனுடைய அரண்மனையை அடைந்து, தன் மனைவியின் உடலைப் பூமியிற் கிடத்தி, காவற்காரர்களை நோக்கி, ஓவென்றலறி, தன் குறையை

முறையிட்டான். காவலாளிகள் அவன் குறையை அரசனுக்குத் தெரிவித்தார்கள். உடனே அரசன் விரைந்து வந்து, அந்தணனைக் கண்டு, அவன் குறையை விசாரித்தான். பின்பு அவன் வேடனை நோக்கினான். வேடன் அரசனை வணங்கி, "சுவாமீ, நான் நிழலுக்காக அந்த ஆலமரத்தின்கீழ்த் தங்கி யிருந்தேன். நான் இந்த அம்மாளைக் கொல்லவில்லை. கொன்றவர் யார் என்பதையும் நான் அறியேன்," என்று கூறினான்.

அரசனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. அவன் தன் மந்திரிகளை நோக்க, அவர்கள், "இவ்வேடனைத் தண்டித்தால் ஒழிய, இவன் உண்மையைச் சொல்லமாட்டான்," என்றார்கள். அரசன் அவர்கள் கருதியபடியே வேடனைத் தண்டித்து உண்மை யறியும்படி அவர்களுக்குக் கட்டளை இட்டான். அவர்கள் வேடனைப் பலவாறு தண்டித்தும், வேடன் முதலிற் சொல்லியது போலவே சொல்லி நின்றான்.

அதைக் கண்ட அரசன் வேடனைச் சிறையிலிட்டு, பிராமணனைப் பார்த்து, "ஐயரே, நான் இதை ஆராய்ந்து உண்மையை அறிந்து உமது கவலையை நீக்குவேன். நீர் உம்முடைய மனைவியை அடக்கஞ் செய்து வாரும். அதுவரையில் உமது குழந்தை அரண்மனையிலேயே இருக்கட்டும்," என்று கூறினான். பிராமணன் அப்படியே குழந்தையை அரண்மனையில் விட்டுவிட்டுத் தன் மனைவியின் உடலை எடுத்துக்கொண்டு மயானத்தை அடைந்து, செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்து, அரண்மனையை அடைந்தான்.

அரசன் கோவிலை அடைந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "இறைவரே, இவ்வழக்கினுண்மை எனக்குச் சிறிதும் விளங்கவில்லையே! இதற்கு நான் என்ன செய்வேன்! நீரே இதன் உண்மையை எனக்கு விளக்க வேண்டும்,'' என்று வேண்டி நின்றான். அப்பொழுது ஆகாயத்தில், "பாண்டியனே, இந்த நகரத்தின் வெளியில் உள்ள செட்டித் தெருவில் ஒரு வீட்டில் இன்று இரவு ஒரு திருமணம் நடக்கும். நீ பிராமணனுடன் அங்கு வந்தால், நாம் இதன் உண்மையை உனக்கு அறிவிப்போம்,'' என்று ஓர் அசரீரி தோன்றிற்று.

கடவுளின் கட்டளையின்படியே அரசன் அன்று இரவு மாறு வேடம் பூண்டு பிராமணனுடன் கலியாண வீட்டை அடைந்து, ஒரு புறத்தில் மறைந்திருந்தான். அப்பொழுது மண மகனும் மண மகளும் கலியாணப் பந்தலில் வந்து அமர்ந்தார்கள். உடனே இரண்டு யம தூதர்கள் அங்கு வந்தார்கள். அவர்களுள் ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, "நண்ப, இந்த மண மகன் உயிரைக் கவர்ந்து வரும்படி நம் தலைவனாகிய யம தருமன் நமக்குக் கட்டளையிட்டானே! இம்மண மகன் ஒரு பிணியும் இல்லாமல் இருக்கிறானே! ஒரு காரணமும் இல்லாமல் நாம் இவன் உயிரை எப்படிக் கவர்ந்து செல்லுவது?'' என்றான். அதற்கு மற்றொருவன், "நண்ப, இது நமக்குக் கஷ்டமான காரியமா? நமக்குக் காரணம் கிடையாமற் போய்விடுமா? காட்டில் ஆல மரத்தில் நெடுநாளாக இலைகளில் சிக்குண்டிருந்த அம்பைக் காற்றால் அசைத்து வீழ்த்தி, அந்த மரத்தின்கீழ் இளைப்பாறிக்கொண்டிருந்த பார்ப்பனி-

யின் உயிரை நாம் கவர்ந்து செல்லவில்லையா? அப்படியே இப்பொழுது இவ்வீட்டின் புறக்கடையில் நிற்கும் பசுவைத் தூரத்தி, இம்மணமகனை முட்டச்செய்து, இவன் உயிரைக் கவர்வோம்,'' என்று கூறினன்.

யம தூதர்களின் உருவமும் அவர்கள் பேசிய பேச்சும் கடவுள் அருளால் அரசனுக்கும் பிராமணனுக்கும் மாத்திரம் தெரிந்தன. சிறிது நேரத்திற்குள் அவ்வீட்டின் புறக்கடையில் நின்றுகொண்டிருந்த பசு, மேள ஆரவாரத்தைக் கேட்டு மிரண்டது போல உள்ளே ஓடி வந்து, எல்லோருந் திடுக்கிடும்படி மணமகனை முட்டிக் கொன்றது. மண வீடு பிண வீடாயிற்று.

பிறகு அரசனும் பிராமணனும் உண்மையை உணர்ந்தனர்; கடவுளை வணங்கினர். அரசன் பின்பு பிராமணனுக்கு வேண்டிய பொருள் கொடுத்து, அவனை வேறு கலியாணம் செய்துகொள்ளும்படி அவன் குழந்தையுடன் கூட்டி யனுப்பினன்; வேடனைச் சிறையிலிருந்து நீக்கி, "ஐயா, நான் அறியாமையினல் செய்த தண்டனையை நீ பொறுக்க வேண்டும். இனி நீ உன் இருப்பிடஞ் செல்லலாம்,'' என்று சொல்லி, அவனுக்கும் வேண்டிய பொருள் கொடுத்து அனுப்பினன்.



## 10. காகம் பாம்பைக் கொன்றது

கோடுறு சினையில் காகம்
கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும்
பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங்
கதுபெறும் முட்டை எல்லாம்
நாடியே குடித்துப் போட
நலிந்துளம் மெலிந்து வாடி 1.

தன்னுயிர்ப் பாங்கன் ஆன
சம்புகன் அருகு போய்,'இங்(கு)
என்னசெய் குவன்நான்?' என்ன,
'இதைக்கோலல் அரிதோ? நீபோய்
மன்னவன் தேவி ஆடும்
மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து
பொடுக பொந்தில்,' என்ன 2.

காகம்அப் படியே செய்யக்
காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை
ஈர்ந்தனர்; ஈரும் போதில்
நாகம்அங்(கு) இருந்து சீற
நறுக்கினர் இருதுண்(டு) ஆக :
ஆகையால் உபாயத் தாகா
அருஞ்செயல் எதுவும் இன்றே.

—பஞ்ச தந்திரப் பாடல்

குறிப்புரை—1. கோடு - மரம், சினை - கிளை, பேடு - பெண்காகம், நாடி-விரும்பி, நலிந்து-வருந்தி, உளம்-மனம்.

2. பாங்கன் - சினேகிதன், சம்புகன் - நரி, அரிதோ - கஷ்டமான காரியமோ, தேவி - மனைவி, ஆடும் - ஸ்நானம் செய்யும், மஞ்சனச் சாலை - குளியல் அறை, புக்கு - புகுந்து, அணி - ஆபரணம்.

3. காவலன் - அரசன், ஏவலாளர் - வேலைக்காரர், ஏகி - சென்று, ஈர்ந்தனர் - வாளால் அறுத்தனர், நறுக்கினர் - வெட்டினர், அருஞ்செயல் - கஷ்டமான காரியம், இன்று - இல்லை, ஏ - அசைச்சொல்.

# 11. சிவாஜி மன்னர்

மூன்னூறு வருடங்களுக்கு முன், மகாராஷ்டிரம் என்னும் நாட்டில், சிவாஜி மன்னர் பிறந்தார். அவர் தந்தையார் பெயர் ஷாஜி; தாயார் பெயர் ஜீஜிபாய். ஷாஜி என்பவர் பீஜபூர்ச் சுல்தானிடம் உத்தியோகம் செய்து வந்தார்.

சிவாஜி தம் நாட்டிற்குப் பெயரும் புகழும் உண்டாக்கத் தகுந்தவராக வேண்டும் என்பது அவர் தாயாரின் கருத்து. அதனுல், ஜீஜி பாய் அம்மையார் தம் புத்திரருக்கு இராமாயணத்திலும் பாரதத்திலும் சொல்லப்படும் வீரர்களின் சரித்திரங்களைச் சொல்லி வந்தார். சிவாஜி அந்தச் சரித்திரங்களை மிக்க விருப்பத்தோடு கேட்டு, தாம் இராமரைப் போலவும் தருமரைப் போலவும் விளங்க வேண்டும் என்று கருதினுர்.

சிவாஜி தம் பத்தாம் வயது முதல், பூனுவில், தம் தாயாரோடு வாழ்ந்து வந்தார். அவர்கள் ஷாஜியினிடம் வேலை பார்த்து வந்த தாதாஜி கோண்ட தேவ் என்பவரால் ஆதரிக்கப்பட்டு வந்தார்கள். சிவாஜி படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளவில்லை; ஆனுல், போர் செய்யும் முறைகளை அவர் மிக விரைவாகக் கற்றுக்கொண்டார்.

சிவாஜிக்கு மத சம்பந்தமான பாட்டுகளைக் கேட்பதிலும் பாடுவதிலும் விருப்பம் அதிகம். சில வேளைகளில் அவர் தம் இருப்பிடத்தைச் சூழ்ந்துள்ள காடுகளையும் மலைகளையும் சுற்றித் திரிந்து பார்த்து வருவார். அவர் தம்முடன் வலிய சிறுவர் சிலரைக் கூட்டிக்-

கொண்டு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அவர்களை நடத்திச் செல்லுவார்.

சிவாஜிக்கு இருபதாம் வயது முடிந்ததும் அவரை ஆதரித்தவர் இறந்தார். அதுமுதல் அவர் தம்மோடிருந்த வாலிபர்களுடன் பல இடங்களுக்குச் சென்று கொள்ளை



அடித்தும், ஒவ்வொரு கோட்டையாகச் சிலகோட்டைகளை முற்றுகை இட்டும், தமது வீரத்தைக் காட்டி வந்தார். அதி விரைவில் தக்காணம் முழுவதும் அவர் பெயரும் புகழும் பரவின. அக்காலத்தில் அரசாண்டு வந்த மொகலாய அரசனும் சிவாஜிக்கு அஞ்சி, அவரை

அடக்க முயன்றான். பீஜபூர்ச் சுல்தானும் சிவாஜியைத் தண்டிக்கக் கருதினான்.

பீஜபூர்ச் சுல்தான், சிவாஜியை அடக்கும்படி, அப்ஸல்கான் என்னும் தன் சேனைத் தலைவனை ஒரு சேனையுடன் அனுப்பினான். அப்ஸல்கான் சிவாஜியைத் தன் கூடாரத்திற்கு அழைத்து, அவரிடம் சமாதானப் பேச்சுப் பேசுபவனைப் போலப் பாவனை செய்தான். சிவாஜி அப்ஸல்கானை வணங்கி நின்றனர். அப்ஸல்கான் சிவாஜியை அன்போடு தழுவிக்கொள்பவனைப்போலப் பாவனை காட்டி, அவரைத் தன் உடை வாளால் குத்திக் கொல்ல முயன்றான். சிவாஜி தந்திரமாக அவன் பிடியிலிருந்து விலகி, தாம் கையில் அணிந்திருந்த புலி நகங்களால் அவனைக் கொன்றார். உடனே சுல்தான் சேனை காற்றாய்ப் பறந்து மறைந்தது.

சிவாஜி தாம் தொடங்கும் எக்காரியத்தையும் முடிக்காமல் விடுவதில்லை. பவானி என்னும் தேவதையினிடத்தில் அவர் அதிக பக்தி கொண்டவர். ஓர் இரவு பவானி தேவதை அவர் முன் தோன்றி, அவருக்கு ஒரு வாளைக் கொடுத்து, வெற்றி யுண்டாகும்படி அவரை வாழ்த்தி மறைந்ததாகவும் சிலர் சொல்லிக்கொள்ளுவர்.

மோகலாய சக்கரவர்த்தி, சிவாஜியை அடக்க எண்ணி, ஷெயிஷ்டகான் என்னும் தன் பிரதிநிதியை ஒரு பெருஞ்சேனையோடு பூனாவுக்கு அனுப்பினான். ஷெயிஷ்டகான் தன் சேனையோடு ஓரிடத்தில் தங்கியிருந்தான். அதை அறிந்த சிவாஜி, இரவில் நானூறு வீரர்களுடன் அவ்விடத்தை அடைந்தார். அப்பொ-

ழுது ஷெயிஷ்டகான் வீரர் அனைவரும் பெருந்தூக்கத்தில் ஆழ்ந்து இருந்தனர். சிவாஜி ஷெயிஷ்டகான் உறங்கிய அறையில் நுழைந்து, அவனைக் கொல்ல முயன்றார். ஆனால், ஷெயிஷ்டகான் சிவாஜியை எதிர்த்துப் போராடித் தன் பெருவிரலை இழந்து, ஓடி மறைந்தான். சிவாஜியும் அவருடன் வந்த வீரரும், துன்பம் இல்லாமல், தம் இருப்பிடத்தை யடைந்தனர்.

மோகலாய சக்கரவர்த்தி, மீண்டும் சிவாஜியை ஒழிக்கக் கருதி, அவரை ஆக்கிராவிலுள்ள தன் கொலு மண்டபத்திற்கு வரவழைத்தான். சிவாஜி அவ்விடத்தை யடைந்ததும் சிறைப்படுத்தப்பட்டார். சிவாஜி சிறைச்சாலையில் நோய் கொண்டவர் போல நடித்து, அந்த நோய் நீங்குவதற்காகப் பிராமணர்களுக்கும் ஏழைகளுக்கும் பலகாரங்களை அனுப்பி வந்தார். சில நாள் வரையில் சிறைச்சாலையிலிருந்து வெளியிற் செல்லும் பலகாரக் கூடைகளைச் சிறைக் காவலாளிகள் பரிசோதித்து வந்தார்கள்; பிறகு நாளடைவில் அப்படிப் பரிசோதிப்பதை விட்டுவிட்டார்கள். ஒரு நாள் சிவாஜி ஒரு கூடையில் மறைந்துகொண்டு சிறையிலிருந்து தப்பினார்.

சிவாஜி பெண்களிடத்திலும், குழந்தைகளிடத்திலும்,ஏழை எளியவர்களிடத்திலும் மிகவும் அன்புடையவர். அவர் இந்துகோவில்களையும் மகமதிய மசூதிகளையும் போற்றி வந்தார். அவருக்கு இராமதாசர் என்னும் தம் குருவினிடம் பெருமதிப்புண்டு. அவர் தாம் சம்பாதித்த பெரிய இராச்சியத்தை இராம தாசருக்கு அர்ப்பணம் செய்தார். ஆனால், இராம தாசர் அவரையே

அதை ஆளும்படி கட்டளையிட்டார். சிவாஜி தம் குடிகளை அன்போடு ஆதரித்தார்; துஷ்டர்களைக் கடுமையாகத் தண்டித்தார்.

சிவாஜி ஏற்படுத்திய இந்து இராச்சியம் அவர் காலத்திற்குப் பின் அழிந்துவிட்டது. சிவாஜியின் குணங்கள் மிகவும் போற்றக் கூடியவை. சிவாஜியின் பெருமையை நினைப்பூட்டுவதற்காக அவருடைய உருவச் சிலை ஒன்று சில வருடங்களுக்கு முன் பூனாவில் செய்து அமைக்கப்பட்டு இருக்கிறது. நல்லவர்கள் இந்த உலகத்தை விட்டு மறைந்து போனாலும், அவர்களுடைய புகழ் இந்த உலகம் உள்ள வரையில் நிலை பெற்று இருக்கும் அல்லவா?

## 12. ஔவையாரும் அன்பிலா விருந்தும்

**நாடக பாத்திரங்கள்:**—ஔவையார், குடியானவன், அவன் மனைவி.

**காலம்:**—வேனிற் காலத்தில் நடுப் பகல்.

**இடம்:**—குடியானவன் குடிசை.

[ஔவையார் வெயிலால் களைத்துப் பசியோடு குடியானவன் வீட்டுத் திண்ணையில் படுத்திருக்கிறார். குடியானவன் வெளி வந்து ஔவையாரைச் சிறிது நேரம் உற்றுப் பார்க்கிறான்.]

குடியானவன்:—அம்மையீர், நீர் பசியால் வருந்திக் களைத்தவர் போலக் காணப்படுகின்றீரே! உமது பெயர் என்ன? உமது இருப்பிடம் எது? என்ன காரியமாக இவ்விடம் வந்தீர்? தயை கூர்ந்து தெரிவிக்க வேண்டுகிறேன்.

ஔவையார்:—அன்பனே, நீ எண்ணியது உண்மையே. பசி என் காதை அடைக்கிறது. வெயிலின் கொடுமை என்னால் தாங்க முடியவில்லை. என்ன செய்வேன்! சிறிது நேரம் இளைப்பாறிச் செல்லலாம்



171302

என்று எண்ணி இங்கு வந்து படுத்தேன். தூக்கம் என்னும் சுகந்தரும் தெய்வம் பசி என்னும் பேயினால் வருந்துகின்ற என்னைத் தொடமாட்டேன்

என்கிறதே! என் பெயர் ஔவை. கல்வி கற்பதில் காலங் கழிப்பதே என் தொழில். எனக்கு இருப்பிடம் இன்னது என்பது இல்லை. 'கற்றூர்க்குத் தம்மூர் என்று ஊர் இல்லை,' என்பது பெரியோர் வாக்கு அல்லவா ? எதுவும் எனக்கு ஊரே; யாவரும் எனக்குச் சுற்றத்தாரே. அன்பனே, சிறிது கூழ் கரைத்துக் கொடுத்தால், குடித்துப் பசியாறுவேன்.

குடியானவன்:—(சிறிது நேரம் என்னவோ யோசித்துக்கொண்டு இருந்து, பின்பு) அம்மையீர், நான் உமது பெயரைமுன்னமேகேள்விப்பட்டு இருக்கிறேன். நீர் கவி பாடுவதில் வல்லவர் என்பதும் எனக்குத் தெரியும். நீர் இங்கு வருவதற்கு என் குடிசை என்ன தவம் செய்தது! இதோ வந்துவிட்டேன். சற்றுப் பொறுத்து இரும்.

[குடியானவன் உள்ளே போகிறான். அவன் மனைவி படுத்துக்கொண்டிருக்கிறாள். குடியானவன் அவள் அருகில் அமர்ந்து பேச முயல்கிறான்.]

மனைவி :—என்ன சமாசாரம்? சொல்லுவதைச் சொல்லித் தொலையும். இதில் என்ன இரகசியம் வேண்டி இருக்கிறது ?

குடியானவன் :—பெண்ணே, நீ கோபிக்காதே. இது கோபங் கொள்ளத் தகுந்த சமயம் அன்று. ஔவையார் என்னும் கல்வியிற் சிறந்த அம்மையார் வந்திருக்கிறார். கொஞ்சம் கூழிருந்தால் கரைத்-

துக் கொடு. உனக்குப் பெரும்புண்ணியம் உண்டாகும். கிழவி, பாவம்!

மனைவி:—வந்தவள் யாரானால் எனக்கென்ன? அவளுக்கு இங்கே என்ன வேலை? உமக்கு விருந்து ஒன்று? உம் இழவுக்கு அழுவது போதாமல் ஊர் இழவுக்கும் நான் அழவேண்டுமோ? உம் வேலையைப் பார்த்துக்கொண்டு போம். எனக்கு இப்பொழுது எழுந்திருக்க முடியாது. இந்நேரம் உழைத்துவிட்டுப் படுத்தேனே! விருந்துக்கு என்ன குறைவு!

குடியானவன்:—கண்மணீ, நீ கோபிக்காதே; எனக்கு அவமானத்தை உண்டாக்காதே! கற்றவர் சாபத்திற்கு ஆளாகாதே!

மனைவி:—ஓகோ! அப்படியா சமாசாரம்!

[அங்கிருந்த முறத்தை எடுத்து அவனை அடிக்கிறாள். குடியானவன் வெளியே ஓடுகிறான். ஔவையார் அவனைப் பார்த்துப் பாடுகிறார்.]

ஔவையார்:—

சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல்வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே!-தொண்டா,
செருப்படி தான் செல்லாஉன் செல்வமென்ன செல்வம்!
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்.

மனைவி:—(ஔவையார் பாடியதைக் கேட்டுப் பயந்து, தனக்குள்) ஐயோ! இவள் யார்? நம்மைச் சபித்து விடுவாள்போல இருக்கிறதே! தொலைகிறது சனியன்! ஒரு குடுவைக் கூழைக் கொடுத்துத் துரத்துவோம்!—(ஔவையாரைப் பார்த்து) அம்மணீ,

மன்னிக்க வேண்டும். எனக்கு உடம்பு சுகமில்லை. சிறிது பொறும். கூழ் கொண்டு வருகிறேன்.

[உள்ளேசென்று கூழ் கொண்டுவந்து கொடுக்கிறாள். ஔவையார் மனம் வருந்திப் பாடுகிறார்.]

ஔவையார்: —

காணக்கண் கூசுதே! கையெடுக்க நாணுதே!
மாணுக்க வாய்திறக்க மாட்டாதே!—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தே!ஐயோ!
அன்பில்லாள் இட்ட அமுது!

இதை நான் எப்படி அருந்துவேன்! பசியைவிட மானமன்றோ பெரியது!—(குடியானவனைப் பார்த்து) அன்பனே,

பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடி இருக்கலாம்;—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாயின்
கூறாமல் சன்னியாசம் கோள்.

நான் போய் வருகிறேன். உனக்கு நன்மை உண்டாகட்டும்.

[ஔவையார் போய்விடுகின்றார். குடியானவனும் அவன் மனைவியும் அவரைப் பார்த்துக்கொண்டே நிற்கின்றனர்.]

---

# 13. திலகாஷ்ட மகிஷ பந்தம்

வட இந்தியாவில் உள்ள தென்னலி என்னும் ஊரில் ஒரு பிராமணச் சிறுவன் இருந்தான். அவன் பெயர் இராமன் என்பது. அச்சிறுவன் ஒரு நாள் ஒரு சந்நி-யாசியைக் கண்டு வணங்கினன். அதனல், அவர் அவ-னுக்குக் காளியைத் துதிக்கும் மந்திரத்தை உபதே-சித்து, "இராமா, நீ இந்த மந்திரத்தை மூன்று கோடி முறை உச்சரித்தால், காளி என்னும் தேவதை உன்முன் தோன்றுவாள். நீ விரும்பும் வரத்தை அவளிடம் வேண்டிப் பெற்றுக்கொள்ளலாம்," என்று கூறி, அவனை ஆசிர்வதித்துச் சென்றார்.

தென்னலிராமன், சந்நியாசியின் கட்டளைப்படியே அந்த மந்திரத்தை மூன்று கோடி தரம் உச்சரித்தான். உடனே காளி என்னும் தேவதை அவன் முன் தோன்-றினள். அவன் காளியைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தான். காளி, "ஏனடா என்னைப் பார்த்து நகைக்-கிருய்?" என்று கேட்டாள். அவன், "தேவியே, ஒரே மூக்குள்ள ஜனங்களுக்குச் சல தோஷம் உண்டானல், அதைச் சிந்த முடியாமல் அவர்கள் இரண்டு கைகளும் சோர்ந்துவிடுகின்றனவே! பல மூக்குகளையுடைய உனக்-குச் சல தோஷம் வந்துவிட்டால், நீ என்ன செய்வாய்? பாவம்! இதை எண்ணியே நான் சிரித்தேன்," என்-ருன். காளி அவனைப் பார்த்து, "இராமா, நீ என்னி-டம் விகடமாகப் பேசினதால், இது முதல் நீ விகடத்-தில் சிறந்த விகட கவி ஆவாய். உன்னை அரசர் மெச்-

சும்படியான பதவி உனக்குக் கிடைக்கும்,'' என்று சொல்லி மறைந்து போனாள்.

காளியின் திருவருளைப் பெற்ற தென்னாலிராமன் அது முதல் விகடஞ் செய்வதில் சிறந்து விளங்கினான். அவன் புகழ் நாடு முழுதும் பரவிற்று. அவன் காலத்தில் விஜய நகரத்தில் அரசாண்டு வந்த கிருஷ்ண தேவ ராயர் என்னும் மன்னர் அவனை அழைப்பித்துத் தம் சபையில் விகட கவியாக அமைத்துக்கொண்டார். அவன் தன்னுடைய சிறந்த விகடச் செயல்களால் அரசரையும் மற்றவர்களையும் மிக மகிழச் செய்து வந்தான். அவன் செய்த விகடச் செயல்களில் ஒன்றை நாம் இவ்விடத்தில் படிக்கலாம்:

ஒரு நாள் கிருஷ்ண தேவ ராயர் சபையில் இருந்த வித்துவான்களுடன் தர்க்கம் செய்து அவர்களை வென்று பரிசு பெறுவதற்காக ஒரு பெரும்புலவர் வந்தார். அவர் கல்வியில் சிறந்தவர். ஆகையால், கல்விக் கடல் என்னும் பொருள் வாய்ந்த வித்தியா சாகரர் என்னும் பட்டத்தை அவர் பெற்றிருந்தார். அவரைக் கண்ட புலவர்கள் மிகவும் பயந்து, தென்னாலிராமனைப் பார்த்து, "நண்பரே, இந்தப் புலவர் எங்களை வென்றுவிட்டால், எங்களுக்கு அவமானம் ஏற்படுமே! நாங்கள் இதற்கு என்ன செய்வோம்! நீர் இதற்கு ஓர் உபாயம் சொல்ல வேண்டும்,'' என்று வேண்டினார்கள். தென்னாலிராமன், "வித்துவான்களே, நீங்கள் இதற்கு அஞ்ச வேண்டா. நான் வித்தியா சாகரரை வென்றுவிடுவேன். ஆனால், நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும்: அந்த வித்துவான் நாளைக்குச் சபைக்கு வரும்போது நீங்கள் என்னை

அவருக்குக் காட்டி, 'ஐயா, இவர் எங்கள் குரு. ஆகையால், நீர் இவரிடம் தர்க்கம் செய்யலாம்,' என்று சொல்லுங்கள். பிறகு நடக்க வேண்டுவதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்,'' என்று கூறினன். சபைப் புலவர்களும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டார்கள்.



மறு நாள் தென்னலிராமன் சில எள்ளு விறகுகளை ஓலைச் சுவடிபோல அடுக்கி, அவற்றை எருமை கட்டும் கயிற்றினல் சுற்றிக் கட்டி, ஒரு துணியில் சுருட்டி எடுத்துக்கொண்டு; சபையை அடைந்தான். அவன் வருவதற்கு முன் வித்திபா சாகரரும் அவருடைய மாணவர் பலரும் சபையில் ஒரு புறம் உட்கார்ந்திருந்தனர். மறு புறத்தில் சபைப் புலவர்கள் உட்கார்ந்-

திருந்தார்கள். அரசரும் சிங்காதனத்தில் உட்கார்ந்திருந்தார். தென்னலிராமன் வந்ததும் சபைப் புலவர்கள் எழுந்து அவனை வணங்கி, அவன் உட்கார்ந்த பின் உட்கார்ந்தார்கள்.

பிறகு சபைப் புலவர்கள் வித்தியா சாகரரை நோக்கி, "ஐயா, இவர் எங்கள் குரு மூர்த்தி. இவர் படிக்காத சாஸ்திரம் இல்லை. இவரிடம் வந்து தர்க்கம் செய்து தோற்று ஓடினவர்களுக்குக் கணக்கே இல்லை. நீர் இவரோடு தர்க்கம் செய்யலாம்," என்றார்கள். உடனே வித்தியா சாகரர் தென்னலிராமனைப் பார்த்து, "ஐயா, உம்மிடமுள்ள புத்தகத்தின் பெயர் என்ன?" என்று கேட்க, அவன் எழுந்து, "இஃது ஓர் அருமையான சாஸ்திரம். இதை நீர் இது வரையில் பார்த்திருக்க இயலாது என்று எண்ணுகிறேன். இதன் பெயர் திலகாஷ்ட மகிஷ பந்தம் என்பது," என்று கூறினான். அதைக் கேட்ட வித்தியா சாகரருக்கு ஒன்றுந் தோன்றவில்லை. ஆகையால், அவர், "ஐயையோ! இஃது என்ன விபரீதம்! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற்போல இருக்கிறதே! இந்தப் புஸ்தகத்தின் பெயருக்கே நமக்குப் பொருள் விளங்கவில்லையே! இதில் உள்ள விஷயத்தைப் பற்றிக் கேள்வி கேட்டால், நாம் என்ன செய்வது! இவ்விடத்திலிருந்து தந்திரமாகத் தப்பித்துக்கொண்டு போய்விடுவதே நல்லது," என்று தமக்குள் எண்ணிக்கொண்டிருந்தார். அவர் இப்படி ஆலோசிப்பதைக் கண்ட தென்னலிராமன், "ஐயா, ஏன் தாமதம்? தர்க்கத்தைத் தொடங்கலாமே?" என்றான். அவர், "ஐயா, இன்று

எமக்கு உடல் நலமில்லை. ஆகையால், நாளைக்கு இந்தத் தர்க்கத்தைத் தொடங்கலாம்,'' என்று கூறி, அரசரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, அன்று இரவே அவ்வூரை விட்டுப் போய்விட்டார்.

அடுத்த நாள் அரசர் வித்தியா சாகரர் ஓடிவிட்டதையறிந்து, தெனாலிராமனைப் பார்த்து, "ஐயா, நீர் கூறிய புஸ்தகத்தின் பெயருக்குப் பொருள் என்ன?'' என்று கேட்டார். உடனே தெனாலிராமன் தன்னிடமிருந்த கட்டை அவிழ்த்துக் காட்டி, "அரசரே, திலம் என்பது எள்; காஷ்டம் என்பது விறகு; மகிஷ பந்தம் என்பது எருமை கட்டுங் கயிறு; இம்மூன்றும் சேர்ந்தது திலகாஷ்ட மகிஷ பந்தம் என்பது,'' என்று கூறினான். அதைக்கேட்ட அனைவரும், ஆச்சரியம் அடைந்து, விலாப்புறம் வீங்கச் சிரித்து, மகிழ்ந்தனர்.

---

## 14. எலி மகள் கதை

எந்தவுடல் எடுத்திடினும் இறைவனருள் வழிப்படியே
அந்தவுடல் பயன்பெறுதல் அல்லாது வேறின்றாம்;
அந்தவகை சொல்லுவன்கேள்: அருந்தவமா முனிஒருவன்
சிந்தையினில் நிட்டையோடு சேர்ந்துமர நிழலிருந்தான்.

பருந்தெடுத்த பெண்ணெலியும் பருந்தின்வாய்த் தப்பியங்கே
இருந்தமுனி கரத்தில்விழ ஏதெனவே நோக்கிஅவன்
அருந்தவத்தால் பெண்பிள்ளை ஆக்கிமனை யாள்கையில்
'பொருந்தவளர்,' என்க்கொடுத்தான்; பூவையும்அங் கதை
[வளர்த்தாள்.

அந்தமின்னை, 'பலவானுக் களித்திடுவோம்,' எனமுனிவன்
சிந்தையில்எண்ணிக்கொண்டுசெங்கதிரோன்தனைஅழைத்தே
'இந்தமின்னை நீகொள்,'என இரவிஅறிந்(து) 'எனைமறைக்கும்
முந்தியமே கம்பலவான்; முனிவ!அவன் கைக்கோ(டு),' என

மேகத்தை அழைத்(து),'இவளை விரும்புக நீ,' எனமுனிவன்
தாகத்தோ டுரைக்கஅவன் தானும்அறிந்(து),'எனைத்தூளாய்
மாகத்தில் அடிக்கும்அந்த வாயுபக வான்பலவான்;
மோகத்தோ(டு) அவற்களித்தல் முனிவர! நன்(று)' என்றலுமே

வாயுவையும் அழைத்(து), 'இவளை மணம்புணர்க நீ,'என்று
நேயமுடன் இருடிசொல, நிறைந்திடுமா நுதம் அறிந்தே,
'தூயவனே! எனைமறைக்கும் துங்கவரை யேபலவான்;
சேயிழையை அவற்கருளிச் செய்க,'எனச் செப்பிடவே.

மலையரையன் தனையழைத்து, 'மங்கைமணம்புணர்க,' என,
குலவரையும் அறிந்துகொண்டே கூறுமுனி தனைநோக்கி:
'நிலவரையே எனைஅறுக்க நினைக்கும்அந்த மூடிகமே
பலமுடைய(து); அதற்களித்தல் பண்பாகும்,' எனக்கூற.

எலியரசன் தனையழைத்(து) 'இவளைம்மணம் புணர்க,'என,
'நலதிவளேன் வளையில்வர நாடின்மணம் புணர்வன்,'என,
எலிமகளைத் தவமுனிவன் எலியரசன் விருப்பம்போல்
எலியுருவம் ஆக்கிவிட்டான்; இசைந்தவனும் கொடுபோனன்.

—பஞ்சதந்திரப் பாடல்

குறிப்பு :—1. *இறைவன் - கடவுள், வேறின்றும் - வேறு இல்லை, சிந்தை - மனம், நிட்டை - யோகம்.*

2. *அருந்தவம் - பெரிய தவம், பூவை - மைனவைப் போன்ற அழகிய (முனிவரின்) மனைவி.*

3. மின்-மின்னலைப்போன்ற இடையையுடைய எலிப் பெண்; செங்கதிரோன்-சூரியன், இரவி-சூரியன், முந்திய மேகம் - எனக்கு மேலான மேகம்.

4. தாகத்தோடு - ஆவலோடு, மாகம் - ஆகாயம், வாயு பகவான் - காற்றாகிய தெய்வம், மோகம் - விருப்பம், அவற்கு - அவனுக்கு (அவன் + கு), என்றலும் - என்று சொன்ன உடனே.

5. மணம் புணர்க - கலியாணம் செய்துகொள்ளுக, இருடி - ரிஷி, மாருதம் - காற்று, துங்க வரை - உயர்ந்த மலை, சேயிழை - பெண், செப்பிட - சொல்ல.

6. அரையன் - அரசன், குல வரை - சிறந்த மலை, நில வரை - பூமி வரையில், மூடிகம் - எலி, பண்பு ஆகும் - சிறப்பாகும்.

7. நலது- நல்லது, நாடின் - விரும்பினால், இசைந்து- சம்மதித்து, கொடு போனான் - கொண்டுபோனான்.

---

## 15. சிக்கனம்

நாம் நமது வாழ்நாளைச் செம்மையாகக் கழிப்பதற்கு மூன்று பொருள்கள் நமக்கு இன்றியமையாதவை. அவை உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடுமே யாகும். அம்மூன்றும் நமக்கு எதனால் கிடைக்கின்றன? பணத்தினாலேயே பெரும்பாலும் அவை கிடைக்கின்றன அல்லவா? ஆகையால், நாம் நமது வாழ்க்கையைச் சரி வர நடத்த வேண்டுமென்று விரும்பினால், அதற்கு வேண்டும் பொருளைச் சம்பாதிக்க வேண்டுவது மிகவும் அவசியம். இதனாலேயே, இந்தியர்கள் கடலிற் சென்று பிற நாடுகளை அடைந்து வியா-

பாரம் முதலியவைகளைச் செய்து பொருள் தேடுவதற்குத் தகுந்த வசதிகள் இல்லாத பழைய காலத்தில் ஔவையார் என்னும் தமிழ் மூதாட்டியார், 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு,' என்றும்,

''கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்(று) உண்டாயின்
எல்லாரும் சென்றங்(கு) எதிர்கொள்வர்;—இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்(று) ஈன்றெடுத்த தாய்வேண்
செல்லா(து) அவன்வாயின் சொல்.'' [டாள்;

என்றுங் கூறினர். இவையல்லாமல், 'பணம் பந்தியிலே; குணம் குப்பையிலே.'--'ஈட்டி எட்டிய வரையில் பாயும்; பணம் பாதாளம் வரையில் பாயும்'.—பணமில்லாதவர் நடைப் பிணம்.'—'பணம் பத்து விதமும் செய்யும்.'—'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை'—என்பன போன்ற பழமொழிகளும் அறிவுரைகளும் நம் நாட்டில் வழங்கி வருகின்றன.

இப்படி நம் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருக்கும் பொருளை நாம் கஷ்டப்பட்டுத் தேடுவதுமாத்திரம் போதாது. தேடிய பொருளைப் பாதுகாத்துச் சரியான முறையில் செலவழிப்பதற்கும், அப்பொருளை நாளுக்கு நாள் விருத்திபாக்கிக்கொள்வதற்கும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். நம்மிடத்தில் எவ்வளவுசெல்வமிருந்தாலும், வகையறியாமல் உதாரித்தனமாகச்செலவு செய்வோமானல், சீக்கிரத்தில் அச்செல்வம் முழுவதும் அழிந்து போக, நாம் தரித்திரர்களாகி வருந்துவோம். 'வளவன் ஆயினும், அளவு அறிந்து அழித்து உண்,' என்னும் வாக்கியத்தை நாம் ஒருபோதும் மறத்-

தல் கூடாது. இம்முறையறிந்து பொருளைப் போற்று-வதற்குச் சிக்கனம் என்று பெயர்.

'விரலுக்குத் தகுந்த வீக்கம்,' என்னும் பழ-மொழிப்படி நாம் நமது வருவாய்க்குத் தகுந்த செலவு செய்ய வேண்டும். நாம் மாதந்தோறும் உழைத்துச் சம்பாதிக்கும் பொருளில் ஒரு சிறு பகுதியையாவது நமது பிற்கால வாழ்க்கையின் உபயோகத்திற்காகவும், இடையிடையே ஏற்படும் இன்றியமையாத செலவு-களுக்காகவும் சேர்த்து வைக்க வேண்டும். 'பொருள்-தனைப் போற்றி வாழ்.'—'பல துளி பெருவெள்ளம்.'—'ஒரு காசு பேணில் இருகாசு தேறும்.'—'நாலாறு கூடி-னால் பாலாறு.'—என்பன போன்ற பழமொழிகளை நாம் கவனித்து நடக்க வேண்டும்.

சிலர் வாய்க்குச் சுவையான பல பண்டங்களையும் பெருந்தீனியையும் விரும்பிக் கடன்பட்டாவது அவற்-றைத் தேடிக்கொள்ளுவர். 'கொழுத்த உணவினன் வீட்டில் குடிக்கும் செம்புக்கும் வழி இராது,' என்பது பழமொழி. ஆதலால், எவரும் அப்படிச் செய்யப்பழகு-தல் அடாது. சிலர், 'குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்,' என்பதுபோல, தம் வருவாய் குறைவாயிருந்-தாலும், உயர்ந்த உடுப்புகளை உடுக்க விரும்பிக் கடன் பட்டாவது அப்படிச் செய்வர். நமக்குச் சுத்தமானதும் ஒழுங்கானதுமான உடை அவசியமே ஒழிய, ஆடம்பர-மான பட்டுப் பீதாம்பரங்கள் இன்றியமையாதவைகள் அல்ல. 'உயர்ந்த உடுப்பு அயர்ந்த அடுப்பு,' என்னும் பழமொழியை நாம் அறிந்து நடக்க வேண்டும்.

நாம் ஒரு பொருளை வாங்குவதற்கு முன் அப்பொருள் நமக்கு அவசியமானதா என்பதையும், அப்பொருள் இல்லாமல் நம் வாழ்க்கை நடவாதா என்பதையும் நன்றாக யோசிக்க வேண்டும். நமக்கு அவசியமல்லாத பொருள்களை வாங்கிச் சேர்த்து வைப்பதனால் நமக்கு எவ்விதப் பயனும் ஏற்படாது. சிலர் தமக்கு வேண்டாத பொருளையும், விலை சரசமாகக் கிடைக்கக் கூடுமானால், வாங்கி வைத்துக்கொள்ளுவர். அப்படிச் செய்வதும் சரியன்று.

நாம் தினந்தோறும் ஏற்படும் வரவு செலவுகளைக் குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைக்கும் வழக்கத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வது மிதமிஞ்சிய செலவுகளை யறிந்து சிக்கனமாகச் செலவு செய்வதற்கு ஒரு வழியாகும். வரவு செலவுகளைக் குறித்து வைக்காததால் உண்டாகும் தீமைகள் பல. இதனாலேயே, 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.'—'எழுதி வழங்காதான் வாழ்க்கை கழுதை புரண்ட களம்.'—என்பன போன்ற பழமொழிகள் வழங்குகின்றன.

"ஆன முதலில் அதிகம் செலவானால்,
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய், எழுபிறப்பும் தீயனாய்,
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

என்பதை நாம் மறத்தல் கூடாது.

# 16. நளன்—I

இந்தியாவில் பழைய காலத்தில் ஐம்பத்தாறு இராச்சியங்கள் இருந்தன. அவற்றுள் நிடத நாடு என்பது ஒரு சிறந்த இராச்சியம். நிடத நாட்டுக்கு மாவிந்த நகரம் என்பது தலை நகரமாக இருந்தது.

நளன் என்னும் நல்லரசன் ஒருவன், அந்த நகரத்திலிருந்து, நிடத நாட்டை வெகு திறமையுடன் ஆண்டு வந்தான். அவன் தினந்தோறும் மாலை வேளையில் உலாவி வருவதற்குச் சோலைக்குச் செல்லுவது வழக்கம். அவன் சோலைக்குச் செல்லும்போது அவனுடன் பல தோழியர்கள் செல்லுவார்கள். அவர்கள் ஆடல் பாடல்களால் மன்னனை மகிழ்விப்பது உண்டு.

ஒரு நாள் நளன் வழக்கம் போலவே தோழியர்களுடன் பூஞ்சோலைக்குச் சென்றான். அந்தப் பூஞ்சோலையில் தாமரைத் தடாகம் ஒன்று உண்டு. அந்தக் குளத்தில் ஒரு தாமரைப் பூவில் அரச அன்னம் ஒன்று அமர்ந்திருந்தது. நளன் அதன் அழகைக் கண்டு, மன மகிழ்ந்து, அதைப் பிடித்து வரும்படி தன் தோழியருக்குக் கட்டளையிட்டான். அவர்கள் அவன் விருப்பத்திற்கு இணங்கி, அதைப் பிடித்து வந்து, அவனிடம் கொடுத்தார்கள்.

அரசன் அவ்வன்னத்தைப் பிடித்து, அதன் அழகு முழுவதையும் காண விரும்பினவன் போலப் பல முறை திருப்பித் திருப்பிப் பார்த்தான். அவன் அவ்வாறு பார்த்ததைக் கண்ட அன்னம் பயந்து, “அரசரே, நீர் என்னைக் கொல்லாமல் விட்டுவிடுவீரானால், நான் உமக்கு

ஒரு நன்மை புரிவேன் : விதர்ப்ப தேசத்து மன்னனாகிய வீம ராஜனுக்குத் தமயந்தி என்னும் பெண்ணொருத்தி இருக்கின்றாள். அவள் அழகில் மிகுந்தவள்; நல்ல குணங்களிலும், நல்ல செய்கைகளிலும் சிறந்தவள்; கல்வியில் வல்லவள். அவள் உமக்குத் தகுந்த மனைவியாவாள். அவள் என்னிடம் அன்புடையவள். ஆகையால், நான் சொல்லும் சொல்லுக்குத் தடை சொல்லமாட்டாள். அவளை உமக்கு நான் மணம் புரிவிப்பேன்," என்றது.

நளன் தமயந்தியைப்பற்றி முன்னமே பலர் சொல்லக் கேட்டிருந்தான். ஆகையால், அன்னம் இப்படிச் சொன்ன உடனே, அவன் தமயந்தியை மணம் புரிய விரும்பினான். உடனே, அவன் அந்த அன்னத்தைக் கீழே விட்டு, "அன்னமே, தமயந்தியை நீ எனக்கு மணம் செய்வித்தால், நான் உன்னை என்றும் மறவேன்," என்று கூறினான்.

உடனே அன்னம் பறந்து சென்று, விதர்ப்ப நாட்டின் தலை நகரமாகிய குண்டின புரத்தை யடைந்து, அரண்மனைத் தோட்டத்தை அணுகியது. தமயந்தி அவ்வன்னத்துடன் பழகினவளாதலால், அதைக்கண்டு, நளன் தன்னை மணம் புரிய விரும்பியதை அறிந்து, களிப்படைந்தாள். அன்னம் நளனுடைய சிறப்புகளையெல்லாம் அவளுக்குக் கூறி, அவளுக்கு அவனிடத்தில் மாறாத அன்புண்டாகும்படி செய்துவிட்டு, அச்செய்தியை நளனுக்குத் தெரிவித்துத் தன் இருப்பிடத்திற்குச் சென்றது.

பிறகு தமயந்தி நளனை நினைத்து வருந்திக்கொண்டிருந்தாள். அதனால், அவளது தேகம் நாளுக்கு நாள்

இளைக்கத் தலைப்பட்டது. அதைக் கண்ட அவளுடைய தோழிகள் பயந்து, அவளுடைய விருப்பத்தை ஒருவாறு அறிந்து, அவளுடைய தாய்க்குத் தெரிவித்தார்கள். அவள் அதைத் தன் கணவனாகிய வீம ராஜனுக்குத் தெரிவித்தாள்.

வீமன் தன் மகளுக்குச் சுயம்வரம் ஏற்படுத்தினான். அவன் அந்தச் சுயம்வரத்திற்கு வரும்படி எல்லா அரசர்களுக்கும் தெரிவித்தான். அவன் விருப்பப்படியே எல்லா அரசர்களும் விதர்ப்பநாட்டில் வந்து கூடினார்கள்.

தமயந்திக்குச் சுயம்வரம் என்பதை அறிந்த நளனும் விதர்ப்ப நாட்டை நோக்கி வெகு சந்தோஷத்துடன் வந்துகொண்டிருந்தான். அச்சமயத்தில் தமயந்தியை மணம் புரிய விரும்பி, இந்திரன், யமன், வருணன், அக்கினி முதலிய தேவர்கள் நளனைச் சந்தித்தார்கள். தமயந்தி நளனையே மணம் புரிவாள் என்பது தேவர்களுக்குத் தெரியும். ஆயினும், அவர்கள் நளனைப் பார்த்து, "நளனே, நீ அரசர்களில் உத்தமன். ஆகையினால், நீ எங்களுக்காகத் தமயந்தியிடம் தூதாகப் போய், எங்களில் ஒருவரை மணக்கும்படி அவளுக்குக் கூறிவிட்டு வர விரும்புகின்றோம்," என்றார்கள்.

நளன் தமயந்தியை மணக்கப் பெருவிருப்பங் கொண்டிருந்தபோதிலும், தேவர்கள் அவளை மணம் புரிய விரும்புகிறார்கள் என்பதை அறிந்தவுடனே, அவள்மீது தான் கொண்டிருந்த விருப்பத்தை அடியோடு ஒழித்தான். பிறகு தேவர்கள் சூழ்ச்சியால், நளன், ஒருவரும் தன்னை யறியாதபடி சென்று தமயந்தியைக் கண்டு, அவளிடம் தேவர்கள் விருப்பத்தைத்

தெரிவித்தான். அவள் நளனை நேரில் கண்டதற்காகக் களித்துத் தேவர்கள் விருப்பத்திற்குத் தான் இணங்க முடியாதென்று அவனுக்குத் தெரிவித்தாள்.

நளன் அவள் விருப்பத்தைத் தேவர்களுக்குத் தெரிவித்தான். தேவர்கள் அவனை வாழ்த்திப் பல அருமையான வரங்களை அவனுக்குக் கொடுத்தார்கள். பின்பு அவர்கள், நளனைப்போலத் தாங்களும் உருமாறிச் சுயம்வர மண்டபத்தில் நளனோடு உட்கார்ந்திருந்தால், தமயந்தி தங்களில் ஒருவரை நளன் என்று எண்ணி மாலையிடுவாள் என்று நினைத்து, அப்படியே செய்தார்கள்.

தமயந்தி கையில் பூ மாலையை ஏந்தித் தன் தோழியருடன் சுயம்வர மண்டபத்தை யடைந்தாள். தோழியருள் ஒருத்தி அங்கு உட்கார்ந்திருந்த அரசர்களைப் பற்றித் தமயந்திக்குத் தெரிவித்தாள். தமயந்தி நளனையணுகினதும், அங்கு ஐந்து நளர்கள் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டு நின்றாள். பிறகு, சிறிது நேரம் யோசித்து, நளனுக்குக் கண் இமைப்பதையும், கால் நிலத்தில் படிவதையும், மலர் மாலை வாடுவதையும் கண்டு, தேவர்களுக்கு அச்செயல்கள் இல்லாமையால், அவனே உண்மை நளன் என்று நிச்சயித்து, அவன் கழுத்தில் பூ மாலையை எறிந்தாள்.

தமயந்தி நளனைத் தன் கணவனாகத் தேர்ந்தெடுத்தாள் என்பதை அறிந்த மற்ற அரசர்களுக்கும் தேவர்களுக்கும் வெட்கமும் துன்பமும் மிகுந்தன. ஆயினும், அவர்கள் அவற்றை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை.

பிறகு வீம ராஜன் தன் மகளை நளனுக்குப் பல விதச் சிறப்புகளுடன் மணம் செய்வித்தான். கலியா-

ணம் முடிந்த பின் எல்லோரும் தம் இருப்பிடத்திற்குச் செல்லப் புறப்பட்டனர். தேவர்களும் வானுலகத்தை நோக்கிச் சென்றார்கள். செல்லும்போது, கலி புருஷன் அவர்களைச் சந்தித்து, நடந்த காரியத்தை அறிந்து, நள தமயந்தியர்மீது கோபங் கொண்டான். அவன் தேவர்களைப் பார்த்து, "தமயந்தி உங்களை அவமதித்தாள். இதனால், நான் அவளுக்கும், அவளுடைய கணவனுக்கும் பெருங்கஷ்டங்களை உண்டாக்குவேன்," என்று சபதம் செய்தான்.

நளன் தன் மனைவியுடன் சில நாள் விதர்ப்ப தேசத்தில் தங்கி இருந்தான்; பிறகு, வீம ராஜனிடம் விடை பெற்றுத் தன் மனைவியுடன் நிடத நாட்டையடைந்து, இன்புற்று வாழ்ந்தான். சில வருஷங்களில் தமயந்தி ஒரு புத்திரனையும் ஒரு புத்திரியையும் பெற்றாள். நளன், அப்புத்திரனுக்கு இந்திரசேனன் என்றும், புத்திரிக்கு இந்திரசேனை யென்றும் பெயரிட்டு, அன்போடு அவர்களை வளர்த்து வந்தான்.

---

## 17. நக்கீரர்

பழைய காலத்தில் மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் இருந்தது. அதற்குமுன் இரு சங்கங்கள் இரண்டிடங்களில் இருந்து அழிந்து போயின. ஆகையால், மதுரையில் இருந்த அந்தச் சங்கத்திற்குக் கடைச் சங்கம் என்று பெயர். சங்கம் என்பதற்குக் கூட்டம் என்பது பொருள். பல தமிழ்ப்புலவர்கள் இருந்து பல நூல்களை ஆராய்ச்சி செய்து வந்த அந்தச் சங்கத்தில் நக்கீரர் என்-

பவர். தலைமைப் புலவராக இருந்தார். அவர் அளவில்லாத கல்வியைக் கற்றவர்.

சண்பக மாறன் என்னும் பாண்டியன் அந்தக் கடைச் சங்கத்தை ஆதரித்து வந்தான். ஒரு நாள் அப்பாண்டியன் தன் மனைவியுடன் அரண்மனைப் பூந்தோட்டத்தில் மாலைக் காலத்தில் உலவிக்கொண்டு இருந்தான். அப்பொழுது தென்றல் இனிமையாக வீசிக்கொண்டு இருந்தது. தென்றலை அனுபவித்துக்கொண்டு இருந்த பாண்டியன், அத்தென்றலில் இனிய வாசனை வீசுவதை அறிந்தான். அப்பொழுது அவன் மனைவி தன் கூந்தலை அவிழ்த்துக் கோதிக்கொண்டிருந்தாள். ஆகையால், அந்த மணம் அவள் கூந்தலில் இருந்து வருகிறதோ, அல்லது தென்றல் சோலையிலுள்ள பூவின் வாசனையுடன் கலந்து வீசுகிறதோ என்னும் சந்தேகம் அவனுக்கு உண்டாயிற்று. அதன் உண்மையை அறியப் பாண்டியன் தன் சபையில் பொற்காசுகள் அடங்கிய பை ஒன்றை உயரத்தில் கட்டுவித்து, தன் சந்தேகத்தை நீக்கும் புலவர் அந்தப் பையைப் பெறலாம் என்று தெரிவித்தான். சபைப் புலவரில் ஒவ்வொருவரும் தமக்குத் தோன்றியபடி பதில் சொல்லினர். அவை அரசன் சந்தேகத்தை நீக்கவில்லை. இது நிற்க.

மதுரையில் உள்ள சோம சுந்தரக் கடவுளுக்குத் தருமி என்னும் ஓர் ஏழைப் பிராமண பிரமசாரி அருச்சனை செய்து வந்தான். சண்பக மாறன் ஏற்படுத்திய பரிசின் விஷயம் அவன் காதுக்கும் எட்டியது. உடனே அவன் சோம சுந்தரக் கடவுளை நோக்கி, "சிவபெருமானே, நான் பரம ஏழை. கலியாணம் செய்துகொள்ள

எனக்குப் பொருளில்லை. ஆகையால், சண்பக மாறன் ஏற்படுத்தியுள்ள பரிசை அடியேன் பெறத் தகுந்த வழியைத் தெரிவிக்க வேண்டுகிறேன்,'' என்று கூறிக் கெஞ்சினன். சோம சுந்தரக் கடவுள் ஓர் ஓலைத் துண்டில்,

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பீ!
காமம் செப்பாது கண்டது மொழிமோ:
பயிலியது கெழீஇய மயிலின் நட்பியல்
செறிஎயிற்(று) அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே?''

என்னும் ஒரு பாட்டை எழுதித் தருமியிடங் கொடுத்து, அதைச் சண்பக மாறனிடம் கொண்டுபோய்க் காட்டும்படி கட்டளையிட்டார். இந்தச் செய்யுளுக்குச் சிறந்த பெண்களின் கூந்தலுக்கு மணம் இயற்கையே என்பது கருத்து.

தருமி அதைக் கொண்டுபோய்ப் பாண்டியனிடங் காட்டினன். பாண்டியன் அந்தச் செய்யுளில் தன் கருத்துக்கு விடையிருப்பதைக் கண்டு மகிழ்ந்து, தருமி அதற்கு உரிய பரிசைப் பெறலாம் என்று கூறினன். உடனே நக்கீரர் அந்தச் செய்யுள் குற்றமுடையது என்று கூறி, தருமி பரிசு பெறுவதைத் தடுத்தார். அதனல், தருமி மிகுந்த துன்பத்துடன் மீண்டும் சோம சுந்தரக் கடவுளை அடைந்து, முறையிட்டான். அது கேட்ட கடவுள், தமிழ்ப் புலவரைப் போல வடிவு கொண்டு, தருமியுடன் பாண்டியன் சபையை அடைந்து, "என் செய்யுளுக்குக் குற்றம் கூறிய புலவன் யார்?'' என்று கேட்டார். நக்கீரர், "நானே அதற்குக் குற்றம் கூறினேன். பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில்

மணம் இல்லை; மலர் முதலியவற்றின் சேர்க்கையால், செயற்கை மணம் உண்டு. ஆகையால், பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் உண்டு என்னும் கருத்துடைய உமது பாட்டுப் பொருள் குற்றம் உடையதே,'' என்று கூறினர். சிவபெருமான், "தெய்வப் பெண்களின் கூந்தல் எப்படிப்பட்டது?'' என்று வினவ, நக்கீரர், "அதுவும் செயற்கை மணமுடையதே,'' என்று கூறினர். சிவபெருமானுக்குக் கோபம் பொங்கிற்று. அவர், "பார்வதியின் கூந்தலோ?'' என்று வினவ, நக்கீரர், "அதுவும் அப்படிப்பட்டதே,'' என்றார். உடனே கடவுள் தமது இயற்கை வடிவைக் காட்டி நிற்க, நக்கீரர், "சுவாமி, நீங்கள் பாடிய பாட்டுக் குற்றமுடையதே. நீங்கள் சடை முடியைக் காட்டி என்னைப் பயமுறுத்த வேண்டா. நான் இதற்குத் தோற்றுவிடமாட்டேன்,'' என்று செருக்குடன் கூறினர். நக்கீரனர் செருக்கை அடக்கவேண்டும் என்று எண்ணிய சிவபெருமான் அவரைக் குட்ட நோய் கொண்டு வருந்தும்படி சபித்து மறைந்தார்.

பிறகு நக்கீரர் குட்டநோய் கொண்டு வருந்தி, அந்த நோயை நீக்கித் தாம்செய்த குற்றத்தை மன்னிக்கும்படி கடவுளை வேண்டினர். கடவுள், கைலாயத்தைத் தரிசித்தால் அந்நோய் நீங்குமென்று கூற, நக்கீரர் உடனே புறப்பட்டுப் பல நாள் பிரயாணம் செய்து, இமய மலைச் சாரலை யடைந்து, அங்கிருந்த ஒரு குளக்கரையில் உட்கார்ந்து, கடவுளைத் தியானித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது குளக்கரையில் இருந்த ஆலமரத்திலிருந்து உதிர்ந்த ஓர் இலை பாதி நீரிலும் பாதி கரையிலுமாக

விழுந்தது. உடனே நிலத்தில் விழுந்த பாதி கொக்காகவும், நீரில் விழுந்த பாதி மீனாகவும் மாறி, ஒன்றை ஒன்று இழுக்க, அதைக் கண்டு நக்கீரர் தியானம் நீங்கி, ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார். உடனே ஒரு பூதம் அங்கு வந்து, அவரைத் தூக்கிப் போய், அருகில் இருந்த ஒரு குகையில் அடைத்துவிட்டது. அந்தக் குகையில் அவருக்குமுன் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேர் அந்தப் பூதத்தால் கொண்டு வந்து அடைக்கப்பட்டு இருந்தனர். பூதம், நக்கீரருடன் ஆயிரம் பேராகவே தன் சபதப்படி நீராடி வந்து அந்த ஆயிரம் பேரையும் விழுங்க எண்ணி, வெளியே போயிற்று.



நக்கீரர், அவருக்குமுன் அடைக்கப்பட்டவர்களை விசாரித்துப் பூதத்தின் கருத்தை யறிந்து, அவர்களை விடுவித்துக் காப்பாற்ற விரும்பினர். உடனே அவர் முருகக் கடவுளை நோக்கித் திருமுருகாற்றுப்படை

என்னும் பிரபந்தம் பாடினர். அதனால், முருகக் கடவுள் அவர்முன் தோன்றி, நீராடித் திரும்பி வந்த பூதத்தைக் கொன்று, எல்லோரையும் காப்பாற்றினர்.

பிறகு நக்கிரர் தம் குறையை முருகக் கடவுளுக்கு முறையிட்டு, கைலாயத்திற்குச் செல்ல முடியாமையைத் தெரிவித்தார். முருகக் கடவுள், "நக்கிர, நீ சீகாளத்தி என்னும் தலத்தைத் தரிசித்தால், கைலையைத் தரிசித்த பலன் உண்டாகும். சீகாளத்தி தென் கைலாயம் என்று பெயர் பெறும். இந்தக் குளத்தில் மூழ்கினால், நீ சீகாளத்தியில் உள்ள பொன் முகலி யாற்றில் எழுந்திருப்பாய். சீகாளத்தியைத் தரிசித்ததும் உன் நோய் நீங்கும்," என்று கட்டளை இட்டு மறைந்தார்.

உடனே நக்கீரர் அக்குளத்தில் மூழ்கி, முருகக் கடவுளின் திருவருளால் பொன்முகலி யாற்றில் எழுந்து, சீகாளத்தியைத் தரிசித்து, கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி எனும் ஒரு பிரபந்தத்தைப் பாடினர். உடனே அவர் நோயும் நீங்கியது. பின்பு அவர் மதுரையை அடைந்து, மற்றப் புலவர்களுடன் இருந்து வாழ்ந்து வந்தார்.

நக்கீரர் பல சிறந்த நூல்களையும் தனிப்பாடல்களையும் பாடினர். இறையனர் அகப்பொருள் என்னும் இலக்கண நூலுக்கு அவர் எழுதியதாகக் கருதப்படும் உரை மிகவும் சிறந்ததாம். அவர் இயற்றிய நூல்கள்:

1. கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி
2. திருவீங்கோய் மலை எழுபது
3. திருவலஞ்சுழி மும்மணிக் கோவை
4. திருவெழுகூற்றிருக்கை

5. பெருந்தேவ பாணி
6. கோபப் பிரசாதம்
7. கார் எட்டு
8. போற்றித் திருக்கலி வெண்பா
9. திருமுருகாற்றுப்படை
10. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

என்பன.

---

## 18. நளன்—II

தமயந்தியின்மீது கோபங் கொண்ட கலி புருஷன், தமயந்திக்கும் நளனுக்கும் துன்பம் உண்டாக்க முயன்றான். நளனுக்குத் தாயாதி ஒருவன் இருந்தான். அவன் பெயர் புஷ்கரன் என்பது. அவன் சூதாடுவதில் கை தேர்ந்தவன். ஆகையால், கலி புருஷன் ஒரு நாள் அவனிடம் சென்று, அவனை நளனுடன் சூதாடும்படி தூண்டினான்.

புஷ்கரன், கலி புருஷன் விருப்பத்திற்கு இணங்கி, நிடத நாட்டை அடைந்து, நளனைச் சூதாட வேண்டினன். கலி புருஷனுடைய தந்திரத்தினால், நளனும் புஷ்கரன் விருப்பத்திற்கு இணங்கி, அவனுடன் சூதாட ஆரம்பித்தான். நளன் சூதாடத் தொடங்குவதைக் கண்டு அவன் மந்திரிகள்,

"உருவழிக்கும்; உண்மை உயர்வழிக்கும்; வண்மைத்
திருவழிக்கும்; மானம் சிதைக்கும்;—மருவும்
ஒருவரோ(டு) அன்பழிக்கும்; ஒன்றல்ல. சூது
பொருவரோ தக்கோர் புரிந்து?"

என்று சூதினால் உண்டாகும் தீமைகளை யெல்லாம் அவனுக்குச் சொல்லி, அவனைத் தடுத்தார்கள். ஆனால், நளன் அவர்கள் புத்தி மதிகளைக் கேட்கவே இல்லை.

பிறகு, நளன் கலி புருஷனுடைய சூதினால் தன் நாடு நகரங்களை யெல்லாம் சூதில் புஷ்கரனிடம் தோற்றுவிட்டான். நளனுடைய நாடு நகரங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்ட புஷ்கரன், நளனை மனைவி மக்களுடன் நிடத நாட்டை விட்டுச் செல்லும்படி வற்புறுத்தினான். பாவம்!

"குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்."

என்பதற்கு ஏற்றாற்போல, நளன் தன் மனைவி மக்களுடன் நிடத நாட்டை விட்டுப் புறப்பட்டுக் கல்லிலும் முள்ளிலும் நடந்து வருந்தி, ஒரு காட்டை யடைந்தான்.

நளனுடைய மக்கள் இருவரும் பசியாலும், வெயிலின் கொடுமையாலும் வருந்தித் தம்முடைய தாயின் முகத்தையும் தந்தையின் முகத்தையும் பார்த்துத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தனர். அதைக் கண்டு மனம் பொறாத நளன், அவர்களை யழைத்துக்கொண்டு தாய்வீடு செல்லும்படி தன் மனைவிக்குக் கூறினான். தமயந்தி நளனை விட்டுப் பிரியச் சம்மதிக்கவில்லை. ஆகையால், நளன், மக்களை ஒரு புரோகிதருடன் கூட்டி விதர்ப்ப நாட்டுக்கு அனுப்பிவிட்டு, அப்புறம் நடந்தான்.

நளனும் தமயந்தியும் அக்காட்டில் கிடைத்த காய்கனிகளைத் தின்று, ஒரு மரத்தின்கீழ் இளைப்பாறத் தங்கினர். அப்பொழுது அழகிய பறவையொன்று தமயந்தியின் முன்தோன்றியது. உடனே தமயந்தி அந்-

தப் பறவையைத் தனக்குப் பிடித்துத் தரும்படி நளனை வேண்டினாள். நளன் அப்பறவையைப் பிடிக்க எண்ணி, அதன்மேல் தன் மேலாடையை வீசினான். கலி புருஷனாகிய அப்பறவை, அந்த ஆடையைக் கவர்ந்துகொண்டு போய்விட்டது.




பிறகு அவ்விருவரும் ஒரு பாழ் மண்டபத்தில் அன்று இரவைக் கழிக்கத் தங்கினர். வழி நடந்த களைப்பினால் தமயந்தி அயர்ந்து தூங்கிவிட்டாள். அவள் தூங்குவதைக் கண்ட நளன், அவளைத் தனியே விட்டுச் சென்றால், தாய் வீட்டையடைந்து காலங் கழிப்பாள் என்றெண்ணி, தான் மேலே போட்டுக்கொள்ள அவ-

ளுடைய புடைவையில் ஒரு பகுதியைக் கிழித்துக்-கொண்டு, அவளைத் தனியே விட்டுப் பிரிய மனமில்லா-மல், பிரிந்து சென்றான்.

மறு நாட் காலையில் தமயந்தி விழித்து, நளனைக் காணாமல் வருந்தித் தனக்கு நேர்ந்த ஆபத்துகளிலிருந்து கடவுள் அருளாலும் தன் கற்பின் பெருமையாலும் தப்பிச் சில வழிப்போக்கர் உதவியினால், தன் சிறிய தாய் வசிக்கும் சேதி நாட்டை அடைந்தாள். இது நிற்க.

புரோகிதன் நளன் குழந்தைகளைக் கொண்டு போய் விதர்ப்ப நாட்டில் விட்டு, நடந்ததை வீமனுக்குத் தெரி-வித்தான். உடனே வீமன் நளனையும் தமயந்தியையும் தேடிக்கண்டு பிடிக்கும்படி பல தூதர்களுக்குக் கட்டளை இட்டான். அந்தத் தூதர்களுள் ஒருவனாகிய புரோகி-தன் பல விடங்களிலும் தேடிக் காணாமல், கடைசியில் சேதி நாட்டை யடைந்து தமயந்தியைக் கண்டுமகிழ்ந்து, அவள் இன்னாள் என்பதை அவளுடைய சிறிய தாயா-கிய சேதி நாட்டரசிக்குத் தெரிவித்தான். அவள் அதைக் கேட்டு மிகவும் வருந்தி, அவளை மற்றுஞ் சிலருடன் கூட்டி விதர்ப்ப நாட்டுக்கு அனுப்பினாள். தமயந்தி, தன் மக்களையும் பெற்றோரையும் கண்டு, சந்தோஷித்தாள். ஆயினும், கணவனைப் பிரிந்த துன்பம் அவளை வருத்திக்-கொண்டே இருந்தது.

நளன் தமயந்தியைப் பிரிந்து செல்லுகையில், வழி-யில் மூங்கில் புதர் ஒன்று தீப்பற்றி யெரிந்தது. அதில் ஒரு பாம்பு அகப்பட்டு வருந்த, நளன் அதை அப்புறம் எடுத்து விட்டு ஆதரித்தான். உடனே அப்பாம்பு அவ-னைக் கடித்தது. அவன் உருவம் மாறியது. பின்பு, அப்-பாம்பு ஒரு புருஷனாக மாறி, நளனிடம் ஓர் உடையைக்

கொடுத்து, "ஐயா, நீ உன் பழைய உருவத்தை அடைய விரும்பும்போது, இதைப் போர்த்துக்கொள்," என்று சொல்லி மறைந்தது.

பின்பு, நளன் அயோத்தியை அடைந்து, இருது-பன்னன் என்னும் அரசனிடம், சமையல் செய்யவும் தேரோட்டவும் ஆளாக அமர்ந்தான்.

பின்பு தமயந்தி நளனை எப்படியாவது கண்டு பிடிக்க எண்ணினாள். அவள் தன்னைச் சேதி நாட்டில் கண்டு தன் தாய் வீடு அழைத்து வந்த புரோகிதனைக் கூப்பிட்டு, "அந்தணரே, நீரே என் கணவரையும் கண்டு பிடிக்க வல்லவர். நீர் ஊர் ஊராகச் சென்று,

"கானகத்துக் காதலியைக் காரிருளில் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ?"

என்று உரத்துக் கூறும். அதற்கு யாரேனும் பதில்-உரைத்தால், அவரை யறிந்து வந்து, என்னிடம் தெரி-வியும்," என்றாள்.

அப்புரோகிதன், தமயந்தி கட்டளையிட்டது போல-வே, பல இடங்களிலும் சென்று கூவினான். ஒருவரும் அவனுக்குப் பதிலுரைக்கவில்லை. கடைசியில் அவன் அயோத்தியை அடைந்தான்; இருதுபன்னனுடைய அரண்மனையை அணுகித் தமயந்தி கற்பித்தபடி கூவி-னான். உடனே உரு மாறி யிருந்த நளன் வெளி வந்து, பிராமணனைப் பார்த்து, "ஐயா,

"ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்—தண்தரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வ-
நீத்தானென்(று) ஐயுறேல் நீ." [னத்தே

என்று கூறினன். அது கேட்ட அந்தணன், விதர்ப்ப நாட்டுக்குத் திரும்பி வந்து, தமயந்தியை அணுகி, நடந்ததைத் தெரிவித்தான்.

உடனே தமயந்தி மற்றொரு தந்திரம் செய்தாள்: அவள் அந்தப் பிராமணனைப் பார்த்து, "ஐயரே, நீர் இருதுபன்ன மன்னரிடம் போய், 'தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் ஏற்பட்டிருப்பதால், தாங்கள் வர வேண்டும்,' என்று சொல்லி வாரும்," என்றாள்.

அந்தணன் சென்று, இருதுபன்னனுக்கு அப்படியே தெரிவித்தான். அதைக் கேட்ட இருதுபன்னன் மகிழ்ந்து, முதல் சுயம்வரத்திலேயே தான் தமயந்தியை மணக்க விரும்பி இயலாமற் போனதால், "தமயந்தி இந்த முறை நிச்சயமாக நம்மையே மணப்பாள்," என்று எண்ணினன். ஆகையால், அவன் தேர் ஓட்டுவதில் வல்லவனும், வாகுகன் என்னும் மறு பெயர் கொண்டவனுமான நளனை அழைத்து, "வாகுக, விதர்ப்ப நாட்டரசனாகிய வீம ராஜன் மகளுக்கு இரண்டாம் சுயம்வரமாம். ஆகையால், உடனே தேரைச் சித்தப்படுத்து," என்று கூறினன்.

அதைக் கேட்ட நளன் தமயந்தியைப்பற்றிப் பலவாறு எண்ணி வருந்தினன்; பின்பு தமயந்தி தன்னைக் கண்டு பிடிக்கவே இவ்வாறு செய்திருப்பாள் என்று நிச்சயித்து, வேகமாகச் செல்லக் கூடிய குதிரைகளைத் தேரில் பூட்டினன். உடனே இருதுபன்னன் தேரிலேறினன். வாகுகனாகிய நளன், தேரை விரைவாக நடத்தி, விதர்ப்ப நாட்டில், வீம ராஜன் அரண்மனையின்முன் கொண்டுவந்து நிறுத்தினன். நளனைப் பற்றி வருத்திய கலி புருஷன், வழியிலேயே அவனை விட்டு நீங்கினன்.

இருதுபன்னன் தேரை விட்டு இறங்கி, வீமனிடம் சென்றான். வீமராஜன் அவனைக்கண்டு, "ஐயா, நீர் திடீ-ரென்று இவ்விடம் வந்ததற்குக் காரணமென்ன?" என்று கேட்டான். உடனே இருதுபன்னன், 'இஃது ஏதோ சூது!' என்று எண்ணி, "அன்பரே, உம்மைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்," என்று சாமர்த்தியமாகப் பதில் சொன்னான்.

நளன் குதிரைகளைத் தேரிலிருந்து அவிழ்த்து, ஓரிடத்தில் கட்டித் தீனி போட்டான்; பிறகு சமையல் செய்யத் தொடங்கினான். தமயந்தி தன் தோழியை அழைத்து, அவளுடன் தன் மக்களைக் கூட்டி, நளனி-டம் அனுப்பினாள். நளன் அவர்களைக் கண்டதும், "மக்காள், நீங்கள் என் மக்களைப் போல இருக்கிறீர்-களே! யாருடைய மக்கள்?" என்று வினவி, அவர்களை எடுத்துத் தன் மார்புடன் அணைத்து முத்தமிட்டான்.

உடனே தோழி அப்பிள்ளைகளை அழைத்துக்-கொண்டு தமயந்தியினிடம் போய், நடந்ததைத் தெரி-வித்தாள். பிறகு தமயந்தி, நளன் சமையல் செய்வதில் வல்லவன் என்பதை அறிந்தவளாகையால், அவன் சமைத்த உணவுப் பொருளில் சிறிது வாங்கி வரச் சொல்லி உண்டு, அவனே நளன் என அறிந்தாள்; உடனே தன்னுடைய தந்தைக்குத் தெரிவித்தாள்.

வீமன் மகிழ்வடைந்து, நளனை யழைத்து, அவன் உண்மை வரலாற்றையறிந்து, அவன் தேகம் கறுத்து உரு மாறியிருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்-டான்.

நளன் தமயந்தியை விட்டுப் பிரிந்த பின் நடந்த-தைக் கூறி, பாம்பரசு தனக்குத் தந்த பூந்துகிலைத் தன்-

மீது போர்த்துக்கொண்டான். உடனே அவன் பழைய உருவம் தோன்றியது. அதைக் கண்டு எல்லோரும் களித்தனர்.

பிறகு, இருதுபன்னன் நளனிடமும், வீமனிடமும் விடை பெற்று, அயோத்திக்குச் சென்றான். நளனும், வீமனிடம் விடை பெற்றுத் தன் மனைவி மக்களுடன் நிடத நாட்டை யடைந்து, புஷ்கரனுடன் மறு சூதாடி, இழந்த நாட்டைப் பெற்று, இன்புற்று வாழ்ந்தனன்.

---

## 19. சதகச் செய்யுள்

### 1. நல்ல செயல்கள்

கடுகடுத் தாயிரம் செய்குவதில் இன்சொலால்
களிகோண் டழைத்தல்நன்று;
கனவேள்வி ஆயிரம் செய்வதில் பொய்யுரை
கருத்தோடு சொலாமைநன்று;
வெடுவெடுக் கின்றவோர் அவிவேகி உறவினில்
விவேகியோடு பகைமைநன்று;
வெகுமதிகள் ஆயிரம் செய்வதின் அரைக்காசு
வேளைகண் டுதவல்நன்று;
சடுதியில் பக்குவம் சொல்லும் கொடைக்கிங்குச்
சற்றுமிலை என்னல்நன்று;
சம்பத்து டன்பிணியின் மேலிகுவதின் நோயற்ற
தாரித்தி ரியம்நன்றுகாண்:
மடுவினில் கரியோலம் என்னவந் தருள்செய்த
மால்மருகன் ஆனமுதல்வா!
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!

## 2. பிறந்தார் பெறும் பேறு

சடமோன் றெடுத்தால் புவிக்குநல் லவனென்று
தன்பேர் விளங்கவேண்டும்;
சதிருடன்இ தல்லாது மெய்ஞ்ஞானி என்றவ
தரிக்கவே வேண்டும்; அல்லால்,
திடமினிய ரணசூர வீரன்இவன் என்னவே
திசைமெச்ச வேண்டும்; அல்லால்,
தேகிஎன வருபவர்க் கில்லையென் றுமலே
செய்யவே வேண்டும்; அல்லால்,
அடைவுடன் பலகல்வி ஆராய்ந்து வித்துவான்
ஆகவே வேண்டும்; அல்லால்,
அறிவான துரைமக்க ளாகவர வேண்டும்; இவர்
அதிகபூ பாலர்ஐயா!
வடகுவடு கிடுகிடென, எழுகடலும் அலைஎறிய,
மணிஉரகன் முடிகள்நெரிய,
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே !

—குமரேச சதகம்

குறிப்பு:—(1) மடு - நீர் நிலை, கரி-(முதலையால் பிடிக்கப்பட்டு வருத்தமடைந்த கஜேந்திரன் என்னும் யானை, ஓலம் - அபயம், மால் - மகாவிஷ்ணு, மருகன் - மருமகன், புல்வயல் - திருப்புல் வயல் என்னும் ஒரு சிவ ஸ்தலம் (இது புதுக்கோட்டையைச் சார்ந்த ஓர் ஊர்), செய்குவதின்-செய்வதைக் காட்டிலும், கன வேள்வி - மேன்மையான யாகம், கருத்தொடு-மனமார, வெடுவெடுக்கின்ற - கடிந்து பேசுகின்ற, சடுதி - சீக்கிரம், பக்குவம் சொல்லும் - பசப்பு வார்த்தை பேசுகின்ற, தாரித்திரியம் - தரித்திரம்.

(2) ஐயா - சுவாமியே, வட குவடு - வடக்கில் உள்ள மேருமலே, கிடுகிடு என - கிடுகிடு என்று அசைய, உரகன் - (ஆதிசேஷன் என்னும்) பாம்பு, முடிகள் - தலேகள், நெரிய- சிதைய, சடம் - மனித சரீரம், புவிக்கு - பூமியில் உள்ளவர்- களுக்கு, சதிர் - சிறப்பு, திடம் - வல்லமை, திசை - எட்டுத் திக்கிலும் உள்ளவர்கள், தேகி - (பிச்சை) இடுவாயாக, அடைவு - முறை, துரைமக்கள்-பிரபுக்கள், அதிக பூபாலர்- அரசரைவிடச் சிறந்தவர்.

---

## 20. தசரத ராமரும் பரசு ராமரும்

நெடுங்காலத்திற்கு முன், கோசல நாட்டின் தலே நகராகிய அயோத்தி நகரத்தில் தசரதர் என்னும் சக்கர- வர்த்தியார் அரசு புரிந்து வந்தார். அவருக்குக் கோசலே, கைகேயி, சுமித்திரை என்னும் மூவர் மனேவிமார் உண்டு. கோசலேக்கு இராமரும், கைகேயிக்குப் பரத- னும், சுமித்திரைக்கு இலட்சுமணன் சத்துருக்கினன் என்னும் இருவரும் பிறந்தனர். அம்மைந்தர் நால்வரும் வளர்ந்து, கற்க வேண்டிய கல்விகளேச் சரிவரக் கற்று, எல்லோரும் விரும்பும்படி நடந்து வந்தனர்.

விசுவாமித்திரர் என்னும் முனிவர் காட்டில் ஒரு யாகம் செய்தனர். சில அரக்கர் அந்த யாகத்திற்கு இடையூறு செய்து வந்தனர். விசுவாமித்திரர் இராம- ரைக் கொண்டு அந்த அரக்கரை அழித்துத் தம் யாகத்தை முடிக்கக் கருதினர். அதனல், அவர் கோசல நாட்டை யடைந்து, தசரதரைக் கண்டு, இராமரைத் தம்மோடு அனுப்பும்படி வேண்டினர். தசரதர் முனி- வர் கட்டளேயை மறுக்க அஞ்சி, இராமரை அவருடன்

அனுப்பினர். இராமரை விட்டுப் பிரியாத இலட்சுமணனும் அவர்களுடன் சென்றான். இராமரும் இலட்சுமணனும், முனிவர் விருப்பத்தின்படி அரக்கர்களைக் கொன்று, அவர் செய்த யாகத்தை முடிவு அடையச் செய்தனர்.

பின் விசுவாமித்திரர் இராமரையும் இலட்சுமணனையும் அழைத்துக்கொண்டு, சீதையின் சுயம்வரத்தைக் காண மிதிலைக்குச் சென்றனர். சீதையின் வளர்ப்புத் தந்தையாராகிய ஜனக மகாராஜரிடம் சிவ தனுசு ஒன்று இருந்தது. அவர் அவ்வில்லை முறிப்பவர் சீதையை மணம் புரியலாம் என்று ஏற்பாடு செய்து இருந்தார். இராமர் அவ்வில்லை முறித்தார். அதனால், அவரே சீதையை மணப்பதற்கு உரியவர் ஆனார். பின்பு தசரதருக்கு அந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டது. அவர் தம் மனைவிமாருடனும், பரத சத்துருக்கினருடனும், மற்ற மந்திரிமார் வசிஷ்டர் முதலியவர்களுடனும் மிதிலையை அடைந்தார்.

பிறகு இராமருக்கும் சீதைக்கும் மிகவும் சிறப்பாகக் கலியாணம் நடைபெற்றது. ஜனகர் மகளாகிய ஊர்மிளை என்பவள் இலட்சுமணனுக்கும், அவர் தம்பியின் பெண்களாகிய மாண்டவி சுருத கீர்த்தி என்பவர்கள் பரத சத்துருக்கினருக்கும் மணம் செய்விக்கப்பட்டார்கள். அவர்கள் சில நாள் மிதிலையிலே தங்கி இருந்தார்கள். விசுவாமித்திரர் அவர்களை வாழ்த்திவிட்டுத் தவஞ் செய்யக் கருதி இமய மலைக்குச் சென்றார்.

சில நாட்கள் கழிந்த பின் தசரதர் ஜனகரிடம் விடை பெற்றுத் தம் மைந்தர்களும் மருமக்களும் மற்றும்

உள்ள யாவரும் உடன் வர, அயோத்திக்குப் புறப்பட்டார். அவர்கள் புறப்பட்டுச் செல்கையில் மயில் முதலிய சில பறவைகள் வலப்பக்கமாகவும், காகம் முதலிய சில பறவைகள் இடப்பக்கமாகவும் சென்றன. மயில் முதலியவை வலப்பக்கமாகச் செல்லுதல் நல்ல சகுனமாகும்; காகம் முதலியவை இடப்பக்கமாகச் செல்லுதல் கெட்ட சகுனமாகும். தசரதர் மற்றவர்களோடு ஓரிடத்தில் நின்று, அந்தச் சகுனங்களின் பலனை விளக்கும்படி ஒரு சோதிடனுக்குக் கட்டளையிட்டார். அவன் அவர்களுக்குச் சீக்கிரத்தில் ஓர் இடையூறு உண்டாகி, நன்மையாக முடியும் என்று கூறினன்.

உடனே ஜமதக்கினி என்னும் அந்தண முனிவருக்கு இரேணுகை என்னும் அரசகுமாரியிடம் மைந்தராகப் பிறந்த பரசு ராமர் என்பவர், தம் கையில் ஒரு கோடரியையும் ஒரு பெருவில்லையுந் தாங்கி, இடி இடிப்பது போலப் பெருந்தொனி செய்து, தசரதர் முதலியவர்கள் இருந்த இடத்தை அடைந்தார். அவர் ஒரு காலத்தில் கார்த்த வீரியார்ச்சுனன் என்னும் மன்னனைக் கொன்றதால், அவன் மைந்தர்கள் அவருடைய தந்தையாகிய ஜமதக்கினி முனிவரைக் கொன்றனர். அதனல், பரசு ராமர் கோபங் கொண்டு, அந்த அரச புத்திரர்களையும், மற்ற அரசர் பலரையும் கொன்ருர். அரசர் குலத்தையே கருவறுக்க வேண்டும் என்று எண்ணி, அவர் இருபத்தொரு தலைமுறை வரையில் பலஅரசரைக் கொன்று கோபம் நீங்கினர். அவர் தசரத ராமர் மிதிலையில் வில்லை முறித்துச் சீதையை மணந்த செய்தியைக் கேள்விப்பட்டு, அவரை வெல்ல வேண்டுமென்று எண்ணி வந்தனர்.

தசரதர் பரசுராமரைக் கண்டு அஞ்சி, அவர் வந்த காரணத்தை யறிந்து, இராமர்மீது கோபம் கொண்டு அவரைக் கொல்லா திருக்கும்படி பரசுராமரை வேண்டி-னர். அவர் எவ்வளவு வேண்டியும், பரசு ராமர் கேட்க-வில்லை. அதனால், தசரதர் மூர்ச்சையானார்.



பிறகு பரசு ராமர், தசரத ராமரை நெருங்கி, "இராமா, நான் சொல்வதைக் கேள்: நீ சிவ தனுசை முறித்தது ஒரு வீரச் செயல் அன்று. அஃது ஒட்டை வில். ஒரு காலத்தில் விசுவகர்மன் என்னும் தெய்வத் தச்சன் இரண்டு விற்களைச் செய்து, ஒன்றைச் சிவனுக்-கும் மற்றொன்றை விஷ்ணுவுக்கும் கொடுத்தான். தேவர்-

கள் அந்த விற்களில் எது சிறந்தது என்பதைத் தெரிவிக்கும்படி பிரமனை வேண்டினார்கள். பிரமன், தேவர்களுக்குண்டான சந்தேகத்தை நீக்கக் கருதி, சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் சண்டை மூட்டிவிட்டான். அவ்விருவரும் சண்டையிடுகையில் சிவன் வில் சிறிது முறிபட்டது. உடனே தேவர்கள் போரை விலக்கிவிட்டார்கள். சிவன் தனது வில்லை இந்திரனுக்குக் கொடுத்துவிட்டான்; விஷ்ணுவும் தன் வில்லை இருசிகன் என்னும் முனிவனுக்குக் கொடுத்தான். இந்திரன் தனக்குக் கிடைத்த வில்லை ஜனகனிடம் சேர்த்தான். இருசிக முனிவன் விஷ்ணு தனுசை என் தந்தையாருக்குக் கொடுத்தான். என் தந்தையாருக்குப் பின் யான் அவ்வில்லுக்கு உரியவன் ஆனேன். யான் இருபத்தொரு தலை முறை அரசரை அழித்து, கோபம் நீங்கி, மகேந்திர மலையில் தங்கி யிருந்தேன். நீ மிதிலையில் முறித்த ஒட்டை வில்லின் ஓசை கேட்டுக் கோபித்து இங்கு வந்தேன். நீ வல்லவனானால், இந்த வில்லை வளை; பார்க்கலாம்,'' என்று சொல்லித் தம் கையிலிருந்த வில்லை நீட்டினார்.

தசரத ராமர் அவ்வில்லை மிகச் சுலபமாக வாங்கி வளைத்து, "பரசு ராமா, நீ பல அரசர்களைக் கொன்றாய். ஆயினும், நீ பிராமண புத்திரனாகையாலும், நீ தவ வேடம் பூண்டிருப்பதாலும் உன்னைக் கொல்லல் தகாது. ஆகையால், விரைவில் என் அம்புக்கு ஓர் இலக்கைக் காட்டு,'' என்று கூறினார்.

பரசு ராமர், தசரத ராமர் விஷ்ணுவின் அவதாரம் என்பதை யறிந்து, அவரைப் பலவாறு துதித்து, தமது

தவத்தின் பலனை அவ்வம்புக்கு இலக்காக்கி, விடை பெற்றுச் சென்றனர். பின்பு தசரதர் முதலியோர் பெருங்களிப்பு அடைந்தனர். தசரத ராமர் அவ்வில்லை வருணனிடம் கொடுத்துவிட்டு, மற்றவர்களுடன் புறப்பட்டு, அயோத்தியை அடைந்தார்.

---

## 21. மாணவர்

கடவுளின் படைப்பில் மக்கள் சிறந்து விளங்குவதற்குக் காரணம், கடவுள் அவர்களுக்குத் தந்துள்ள பகுத்தறிவே யாகும். ஆகவே, பெரியோர், 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது,' என்று கூறினர். மக்களின் சிறப்புக்குக் காரணமாகிய பகுத்தறிவை விளக்கமடையச் செய்வது கல்வியேயாகும். ஆகையால், கல்வியே மக்களுக்குரிய 'கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள்,' ஆகும் என்று அறிஞர் கருதுகின்றனர்.

இப்படிப்பட்ட மெய்ப்பொருளாகிய கல்விப் பொருளைத் தேடுவதற்கு மிகவும் சிறந்த காலம் மக்களுடைய இளமைப் பருவமே. அப்பருவத்தில் கல்வி கற்பதில் காலங் கழிப்பவர்களையே மாணவர், மாணுக்கர், மாணவகர், வித்தியார்த்திகள் என்னும் பெயர்களால் வழங்கி வருகிறோம். தமிழ் மொழியின் அமைதிக்கு ஏற்ப, மாணவர் என்னும் சொல்லுக்கு மாட்சிமையுடையவர் என்றும், மாணுக்கர் என்னும் சொல்லுக்கு மாட்சிமைப்பட்ட நாவை யுடையவர் என்றும் பொருள் கூறலாம். இனி,மாணவரின் வகையையும்,அவர் பின்பற்றி நடக்க வேண்டிய முறைகளையும்பற்றிக் கவனிப்போம்:

தமிழ்ப் புலவர் பெருமக்கள் மாணவரைத் தலை மாணவர், இடை மாணவர், கடை மாணவர் என மூன்று பிரிவினராகப் பிரித்தனர். அம்முப்பிரிவினருள் தலை மாணவர் அன்னப் பறவையையும் பசுவையும் ஒத்தவர்; இடை மாணவர் நிலத்தையும் கிளியையும் ஒத்தவர்; கடை மாணவர் சில்லிக் குடத்திற்கும், ஆட்டிற்கும், எருமைக்கும், பன்னாடைக்கும் சமமானவர். இப்பொருள்களின் உவமைப் பொருத்தத்தைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம் :

அன்னப் பறவை என்பது அறிவிற் சிறந்தது. அது இந்நாளிற் காணப்படவில்லை. அது, பாலையும் நீரையும் கலந்து வைத்தால், நீரை நீக்கிப் பாலை மட்டும் உட்கொள்ளும் தன்மை உடையதென்று கூறுகின்றனர். அதைப்போலவே, தலை மாணவர் தமக்கு ஆசிரியர் கற்பிக்கும் விஷயங்களை நன்றாகச் சிந்தித்து, அவற்றில் தள்ளத் தகுவன இருப்பின் தள்ளி, கொள்ளத் தகுவனவற்றையே கொள்ளுவர். பசுவானது, தான் வயிறார மேய்ந்த புல்லைத் தீனிப் பையில் சேமித்து வைத்துக்கொண்டு, பின்பு ஓர் இடத்திற் படுத்து, சேமித்து வைத்த தீனியை மீண்டும் சிறிது சிறிதாகத் தன் வாய்க்குக் கொண்டு வந்து, நன்றாக மென்று தின்னும். அப்படிச் செய்வதற்கு அசை போடுதல் என்று பெயர் வழங்குகிறது. இப்படியே தலை மாணவரும், ஆசிரியர் தமக்குக் கற்பிக்கும் பாடங்களை மனத்தி லமைத்துக்கொண்டு, வீட்டிற்குச் சென்று, தாம் கற்ற அப்பாடங்களை மீண்டும் சிந்தித்து, மனத்தில் பதியச் செய்துகொள்ளுவர். இக்காரணங்களாலேயே அன்னப் பறவையும் பசுவும் தலை மாணாக்கருக்கு உவமிக்கப்பட்டன.

நிலம், உழவன் உழைப்பிற்குத் தகுந்தபடி பலனைக் கொடுக்கக் கூடியது. அது போலவே இடை மாணாக்கர், ஆசிரியர்களின் முயற்சிக்கு ஏற்ற அளவில் கல்வி கற்பர்; தாமாக மேலும்மேலும் முயன்று விஷயங்களைத் தெரிந்துகொள்ளமாட்டார். கிளி, 'சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை,' என்னும் பழமொழிக்கு ஏற்றபடி, யார் எதைச் சொல்லுகின்றனரோ, அதையே திருப்பிச் சொல்லும்; ஒருவர் சொல்லுவதன் உயர்வு தாழ்வுகளை யறிந்து உயர்ந்த சொற்களைச் சொல்லக் கூடிய அறிவு அதற்கு இல்லை. அது போலவே, இடை மாணவர், ஆசிரியர் கூறுவனவற்றையன்றிப் பிறிதொன்றும் அறியமாட்டார். இக்காரணங்களாலேயே நிலமும் கிளியும் இடை மாணவருக்கு உவமை யாயின.

சில்லிக் குடத்தில் நீரை முகந்து வருவோமானால், வீட்டிற்கு வருவதற்குள் அது நீர் முழுவதையும் ஒழுக்கிவிட்டு, வெறுங்குடமாகவே இருக்கும்; கடை மாணவரும் தம் ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை அவ்வப்போதே மறந்துவிட்டு, என்றும் அறிவு பெறாமலே இருப்பர். ஆடு, ஓரிடத்தில் உள்ள தீனியை வயிறு ஆர மேயாமல், பல இடங்களிலும் ஓடி அலைந்து, மாலை நேரத்தில் வயிறு நிரம்பாமலே வீடு வந்து சேரும்; இடை மாணவரும் ஒரு பள்ளிக்கூடத்திலோ, ஓர் ஆசிரியர் இடத்திலோ பொருந்திக் கல்வி கற்காமல், பல பள்ளிக்கூடங்களுக்கு மாறி மாறிப் பல ஆசிரியரிடம் கல்வி கற்க முயன்று, கல்வி நிரம்பப் பெறாமல் போவர். எருமையை நீரில் நன்றாகக் கழுவி விட்டாலும், அது மறுபடியும் தான் வரும் வழியிலுள்ள சேற்றுக் குட்-

டையில் புரண்டு, உடல் முழுவதும் சேற்றைப் பூசிக்கொண்டு வீடுவந்து சேரும்; கடை மாணவரும் பள்ளிக்கூடத்தில் தம் ஆசிரியர் கற்பிக்கும் சிறந்த பொருள்களை மறந்துவிட்டு, வெளியில் பிள்ளைகளுடன் சேர்ந்து பழகி, அவர்களுடைய தீய வழக்கங்களைக் கற்றுக்கொண்டு, வீடு வந்து சேருவர். பன்னாடை, கள் முதலியவற்றை வடி கட்டும்போது மதுரமான சாற்றைக் கீழே விட்டுவிட்டு, அந்தச் சாற்றோடு கலந்திருந்த ஈ செத்தை முதலியவற்றைத் தான் வைத்துக்கொள்ளும்; கடை மாணவரும் ஆசிரியர் கற்பிக்கும்பாடங்களிலுள்ள நல்ல கருத்துகளைக் கற்றுக்கொள்ளாமல், அவர் கற்றுக்கொள்ளக் கூடாதவை என்று விலக்குகின்ற விஷயங்களையே கற்றுக்கொள்வர்.

தலை மாணவராக இருக்க விரும்புவோர், பின்னே கூறிய இடை மாணவர்களைப் போலவும் கடை மாணவர்களைப் போலவும் ஒரு நாளும் பழகக் கூடாது. தலை மாணவர், தம் ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களிலுள்ள அருமையான கருத்துகளைக் குறித்துக்கொண்டு, ஒவ்வொரு நாளும் அவற்றைத் திரும்பத் திரும்பக் கவனித்துத் தம் மனத்தில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

தலை மாணவர் தம் உடலையும், உடையையும் எப்பொழுதும் தூய்மையாக இருக்கச் செய்துகொள்ள வேண்டும். கெட்ட நினைவுகளை நினைப்பதால் மனத்தின் தூய்மை கெட்டுவிடும். ஆகையால், தலை மாணவர் கெட்ட நினைவுகளுக்கு ஒரு போதும் தம் மனத்தில் இடங்கொடுத்தல் கூடாது; நல்ல பிள்ளைகளுடனே எப்-

பொழுதும் பழக வேண்டும்; பெரியோர்களிடத்திலும் ஆசிரியர்களிடத்திலும் மிகவும் அடக்கமாகவும் மரியாதையாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

"ஒழுக்கம் விருப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். அதாவது, நல்ல நடக்கை ஒருவனுக்கு மேன்மையைத் தருவதால், அவ்வொழுக்கத்தை ஒவ்வொருவனும் தன் உயிரைவிட மேலானதாக மதித்துக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதாம்.

மாணவரில் சிலர் தாம் ஓர் ஆண்டில் படிக்க வாங்கிய பாட புத்தகங்களை அந்த ஆண்டில் பரீட்சை எழுதி முடிந்ததும் விற்றுவிடுகின்றனர். இது மிகவும் தீய பழக்கமாகும். நாம் ஒரு நூலை ஒரு முறை படித்தவுடனே அந்த நூலில் உள்ள எல்லாக் கருத்துகளும் நமக்குத் தெரிந்துவிடுவது இல்லை. ஆகையால், நாம் அந்த நூலை மீண்டும் மீண்டும் பல முறை படித்து, அந்த நூலில் சொல்லப்பட்டுள்ள கருத்துகளை நன்றாக ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டும். 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்,' என்னும் முன்னோர் மொழியை நாம் இகழ்ந்துவிடுதல் தகாது.

மாணவர்கள் ஆசிரியர் பாடம் கற்பிக்கும்போது, சித்திரத்தில் எழுதிய பாவையைப் போல, அமைதியாக இருந்து, பாடத்தைக் கவனிக்க வேண்டும். அப்படிச் செய்வதால், ஆசிரியர் கற்பிக்கும் பாடம் மனத்தில் பசுமரத்தாணிபோலப் பதிந்துவிடும். பின்பு அந்தப் பாடத்தை வீட்டுக்குச் சென்று பொறுமையோடு சிந்-

தித்துப் பார்க்க வேண்டும். அப்படிச் சிந்திக்கும்போது சில சந்தேகங்கள் உண்டாகலாம். அந்தச் சந்தேகங்களை அடுத்த நாள் ஆசிரியரைக் கேட்டு நீக்கிக்கொள்ள வேண்டும்.

வகுப்புக்கு ஆசிரியர் வருவதற்கு முன் மாணவர்கள் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு இருத்தல் கூடாது; வகுப்பில் நுழைந்த பிறகு நடக்க வேண்டிய பாடங்களில் கருத்தைச் செலுத்தி, ஒருவரை ஒருவர் அந்தப் பாட சம்பந்தமான கேள்விகளைக் கேட்டு, விடை தெரிந்துகொள்ளுவது நல்லது. தீய பழக்கங்களை மாணவர்கள் கனவிலும் கொள்ளக் கூடாது.

# செய்யுட் பாடம்

# செய்யுட் பாடம்

---

## I. துதி கவிகள்

### ஆழ்வார்கள்

வேதம் தொகுத்துத் தமிழ்ப்பாடல்
செய்த விமலன், பொய்கை,
பூதன், மயிலையர் கோன், புகழ்ச்
சேரன், புத் தூரன், தொண்டர்
பாதம் தரும்துகள், மாமழி
சைக்குமன், பாணன், மங்கை
நாதன், மதுரகவி, கோதைபா
தங்கள் நண்ணுதுமே. 1.

### திருமால்

பண்ணியிடும் பணிபலவே; பொன்னொன் றேயாம்!
பாண்டத்தின் பேர்பலவே; மண்ணொன் றேயாம்!
வண்ணமிகும் பசுப்பலவே; பாலொன் றேயாம்!
வகைஏழின் உடல்பலவே; உயிரொன் றேயாம்,
நண்ணும்அறு சமயங்கள் பேர்வே(று) அல்லால்,
நாதன்நீ ஒருவனே; அவைகள் தம்மை
எண்ணியே செயும்தொண்டர் பூசைக் கெல்லாம்
இரங்கிவரம் தருகின்றாய் எம்பிரானே! 2.

கலை மகள்

புத்தகம் செபவடம் புனித ஞானமா
முத்திரை குண்டிகை முழுதும் ஏந்தெழில்
கைத்தலத்(து) அமிர்தினைக் கலைமடந்தையை
முத்தமிழ்க் கிழத்தியை முடிவணங்குவாம். 3.

விநாயகர்

வான்உலகு மண்ணுலகு வாழ,மறை வாழ,
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க,
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம். 4.

முருகக் கடவுள்

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே!—ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னன். 5.

சிவபெருமான்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென்(று) அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

இயேசு நாதர் 6.

பின்னித்திகழ் என்பிழை அத்தனையும்
மன்னித்தில கும்பத வாழ்வருள்வாய்:
நன்னித்திலம் ஒத்தந கைத்துவர்வாய்க்
கன்னித்தில கம்தரு கான்முளையே! 7.

## II. நீதி சிந்தாமணி

### நல் விருந்தும் தீ விருந்தும்

ஒப்புடன் முகம லர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலும் உண்பதே அமுதம் ஆகும்;
முப்பழ மொடுபோல் அன்னம் முகம்கடுத்(து) இடுவர் ஆகில்,
கப்பிய பசியி னோடு கடும்பசி ஆகுந் தானே. 1.

### அற்பர்க்குப் புத்தி சொல்லல்

வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக்(கு) உரைத்திடில் இடர(து) ஆகுமே. 2.

### கோபத்தின் கொடுமை

வெகுளியே உயிர்க்கெலாம் விளைக்கும் தீவினை;
வெகுளியே குணம்தவம் விரதம் மாய்க்குமால்;
வெகுளியே அறிவினைச் சிதைக்கும்; வெம்மைசால்
வெகுளியில் கொடும்பகை வேறொன்(று) இல்லையால்.

### இரத்தல் இழிந்தது

பல்லெலாம் தெரியக் காட்டி,
பருவரல் முகத்தில் கூட்டி,
சொல்லெலாம் சொல்லி நாட்டி,
துணைக்கரம் விரித்து நீட்டி,
மல்லெல்லாம் அகல ஓட்டி,
மானமென் பதனை வீட்டி,
இல்லெலாம் இரத்தல் அந்தோ!
இழிவிழி(வு) எந்த ஞான்றும். 4

## செல்வத்தின் சிறப்பு

குணம்இருந் தாலும், குலம்இருந் தாலும், கொழுந்தமிழின்
மணம்இருந் தாலும், மதியிருந் தாலும், வழுத்தியவங்
கணம்இருந் தாலும்ஓர் காசும் பெறாது;சிங் காரவரைப்
பணம்இருந் தால்அவர்க் கெல்லாரும் அஞ்சலி பண்ணுவரே.
—விவேக சிந்தாமணி

## கல்வி

குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்(டு)அழகும்,
மஞ்சள் அழகும் அழகல்ல:—நெஞ்சத்து
'நல்லம்யாம்,' என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு. —நாலடியார் 6.

## நல்லோர்

நெல்லுக்(கு) இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்:—தொல்உலகில்
நல்லார் ஒருவர் உளரேல், அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. —மூதுரை 7.

## நட்பு

மருவுக மாசற்றார் கேண்மை; ஒன்(று)ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. —திருக்குறள் 8.

## நன்றி

நன்றி ஒருவற்குச் செய்தக்கால், 'அந்நன்றி
என்று தருங்கொல்? எனவேண்டா:—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருத லால். —மூதுரை 9.

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக்(கு)ஆகாரம் ஆனாற்போல்—பாங்(கு)அறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம். —மூதுரை 10.

செய்ந்நன்றி அறிதல்

ஒருநன்றி செய்தவர்க்(கு) ஒன்றி எழுந்த
பிழைநூறும் சான்றோர் பொறுப்பர்; கயவர்க்(கு)
எழுநூறு நன்றிசெய்(து) ஒன்றுதீ(து) ஆயின்,
எழுநூறும் தீ(து)ஆய் விடும். —நாலடியார் 11.

அறிவுடையோர் செயல்

சாந்தனையும் தீயனவே செய்திடினும், தாம்அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்:—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். —மூதுரை 12.

பெருமையும் சிறுமையும்

பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. —திருக்குறள் 13.

அடக்கம்

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்ப(து)ஒன்(று) உண்டு:—பிறர்பிறர்
சீர்எல்லாம் தூற்றி, சிறுமை புறங்காத்து,
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்.—நீதிநெறி விளக்கம் 14.

கேள்விச் செல்வம்

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. 15.

### முயற்சி

முயற்சி திருவினை ஆக்கும்; முயற்(று)இன்மை
இன்மை புகுத்தி விடும். 16.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலை(வு)இன்றித்
தாழா(து) உஞற்று பவர். 17.

### அறம்

ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். 18.

### நாவடக்கம்

யாகாவார் ஆயினும், நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு. 19.

### சினம்

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 20.

### பொறுமை

ஒறுத்தார்க்(கு) ஒருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 21.

### நல்லொழுக்கமும் தீயொழுக்கமும்

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். —திருக்குறள் 22.

### புறங் கூறுமை

உண்டு குணமிங்(கு) ஒருவர்க்(கு) எனினும்,கீழ்
கொண்டு புகல்வ(து)அவர் குற்றமே:—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்பும் கனி? —நன்னெறி 23.

வாய்மை

எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்ரோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 24.

அறிவு

அறிவுடையார் எல்லாம் உடையர்; அறிவிலார்
என்னுடையர் ஏனும் இலர். 25.

ஆராய்ந்து செயல்

எண்ணித் துணிக கருமம்; 'துணிந்தபின்
எண்ணுவம்,' என்ப(து) இழுக்கு. 26.

சுற்றந் தழுவல்

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல், செல்வம்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 27.

களவு

உள்ளத்தால் உள்ளலும் தீதே, 'பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம்,' எனல். 28.

சூது

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவ(து)ஒன்(று) இல். —திருக்குறள் 29.

வஞ்சித்தல்

வஞ்சித்(து) ஒழுகும் மதியிலிகாள்! 'யாவரையும்
வஞ்சித்தோம்!' என்று மகிழன்மின்;—'வஞ்சித்த
எங்கும் உளன்ஒருவன் காணுங்கொல்!' என்றஞ்சி
அங்கம் குலைவ(து) அறிவு. —நீதிநெறி விளக்கம் 30.

மேன் மக்கள்

ஆற்றுப்பெருக்கற்(று) அடிசுடும்அந் நாளும்அவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உல(கு)ஊட்டும்:—ஏற்றவர்க்கு

நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து. —நல்வழி 31.

### பெரியோர்—சிறியோர்

செயற்(கு)அரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்(கு)அரிய செய்கலா தார். 32.

### அன்பு

அன்பிலார் எல்லாம் தமக்(கு) உரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. —திருக்குறள் 33.

### காலம்

அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா:—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 34.

### மனைவி

இல்லாள் அகத்(து)இருக்க இல்லாத(து) ஒன்றில்லை;
இல்லாளும் இல்லாளே ஆம்ஆயின்,—இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல், அவ்வில்
புலிகிடந்த தூ(று)ஆய் விடும். —மூதுரை 35.

### இன்சொல்

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்: வேழத்தில்
பட்(டு)உருவும் கோல்பஞ்சில் பாயாது :- நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். —நல்வழி 36.

இனிய உளஆக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந்(து) அற்று. —திருக்குறள் 37.

### தெய்வச் செயல்

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா;
பொருந்துவன 'போமின்,' என்றால், போகா:-இருந்தேங்கி
நெஞ்சம்புண் ஆக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 38.

### உழவு

ஆற்றங் கரையின் மரமும், அர(சு)அறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும்அன்றே?—ஏற்றம்
உழு(து)உண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை; கண்டீர்
பழு(து)உண்டு வே(று)ஓர் பணிக்கு.—நல்வழி 39.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். —திருக்குறள் 40.

———

# செய்யுட் பாடக் குறிப்புரை

# செய்யுட் பாடக்

## குறிப்புரை

---

## (எண் - பாட்டேண்)

### I. துதி கவிகள்

1. விமலன் - நம்மாழ்வார், மயிலேயர்கோன் - பேயாழ்வார், சேரன் - குலசேகர ஆழ்வார், புத்தூரன் - பெரியாழ்வார், தொண்டர் பாதம் தருந்துகள் - தொண்டரடிப் பொடியாழ்வார், மாமழிசைக்குமன் - திருமழிசையாழ்வார், கோதை - ஸ்ரீ ஆண்டாள், நண்ணுதும் - நாம் சேர்வோம்.

2. பணி - ஆபரணம், வண்ணம் - நிறம், வகை எழு - பிறப்பின் எழு வகைகள் (அவை மக்கள், தேவர், விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பவை), நண்ணும் - பொருந்தும், அறு சமயம் - ஆறு வகையான மதங்கள் (அவை சைவம், பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் எனபனவாம்; உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சம், பாட்டாசாரியம், பாஞ்சராத்திரம் என்பன புறச்சமயம் எனப்படும்), நாதன் - தலைவன் (கடவுள்), இரங்கி - இரக்கம் கொண்டு, எம்பிரானே - எம்முடைய தலைவனே.

3. செப வடம் - செப மாலை, ஞானமாமுத்திரை - சின் முத்திரை, குண்டிகை - நீர்க் கரகம், எழில் - அழகு, முத்தமிழ்க் கிழத்தி - இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழுக்கு உரியவள் (சரஸ்வதி), முடி - தலையினுல்.

4. மறை - வேதம், பான்மை தரு - உயர்ந்த குணத்தைத் தருகின்ற, செய்ய - செம்மையான, பார்மிசை - பூமியில், நால்வாய் - தொங்குகின்றவாய், பரவி - துதித்து, அஞ்சலி - கும்பீடு.

5. மாயோன் மருகன் - மகாவிஷ்ணுவின் மருமகன், ஒரு கை முகன் - விநாயகன்.

6. வளி - காற்று, ஒளி - பிரகாசம், ஊன் - உடல், கோன்-தலைவன், நின்றுயை - நிலைபெற்றிருக்கின்ற உன்னை, வாழ்த்துவன் - துதிப்பேன்.

7. பின்னித் திகழ் - சிக்கடைந்து விளங்குகின்ற, இலகும்-விளங்கும், நித்திலம் - முத்து, நகை - பற்கள், துவர் - பவளம், கன்னித்திலகம் - பெண்களிற் சிறந்த கன்னி மரியாள், தரு - பெற்ற, கான்முளை - பிள்ளை.

## II. நீதி சிந்தாமணி

1. ஒப்பு - சம்மதம், முப்பழம் - மாம்பழம் பலாப்பழம் வாழைப்பழம், கடுத்து - சுளித்து, கப்பிய - மிகுந்த (மூடிக்கொண்ட).

2. வானரம் - குரங்கு, தூக்கணம் - ஒரு குருவி, நெறி - வழி (உபாயம்), தாண்டி - தாவி, நவின்ற, - (சிறந்தன வாகச்) சொல்லப்பட்ட, நூல்கள் - சாஸ்திரங்கள், ஈனர் இழிந்தோர், இடர் - துன்பம், ('இடரது' என்பதில் 'அது' பகுதிப் பொருள் விகுதி).

3. வெகுளி - கோபம், தீவினை - பாவம், விளைக்கும் - உண்டாக்கும், மாய்க்கும், அழிக்கும், சிதைக்கும்-அழிக்கும், ஆல்-அசைச்சொல், வெம்மை சால்-கொடுமை மிகுந்த.

4. பருவரல் - துன்பம், துணைக்கரம் - இரு கைகள், மல் - வலிமை, மானம் - பெருமை, வீட்டி - அழித்து, இல் - வீடு, அந்தோ - ஐயோ, எந்த ஞான்றும் - எக்காலத்திலும், இழிவு இழிவு - பெரிதும் இழிவானகாரியம் (இது

தேசேலோபாக்கியானம் என்னும் நூலில் உள்ள செய்யுள்.)

5. கொழுந்தமிழ் - செந்தமிழ், மணம் - (பயிற்சி) வாசனை, மதி - புத்தி, வழுத்திய - (சிறப்பித்துச்) சொல்லிய, வங்கணம் - சிநேகம், அஞ்சலி பண்ணுவர் - கை குவித்து வணங்குவர்.

6. குஞ்சி - மயிர், கொடுந்தானை - (முடித்துக் கட்டுவதால் உண்டாகும்) வளைவு உள்ள ஆடை, கோடு - கரை, நெஞ்சத்து - மனத்தில், நல்லம் யாம் - நாம் நல்லோம்.

7. இறைத்த - பாய்ச்சிய, வாய்க்கால் - நீரோடும் கால், பொசியும் - பாயும், தொல்-பழைய, உளரேல் - இருப்பாரானால்.

8. மாசு - குற்றம், கேண்மை - சிநேகம், மருவுக - பழகுக, ஈத்தும் - கொடுத்தும், ஒருவுக - நீக்கிவிடுக.

9. ஒருவற்கு - ஒருவனுக்கு, செய்தக்கால்-செய்தால், தரும்-தருவான், எனல் - என்று எண்ணுதல், நின்று - நிலைபெற்று, தளரா - சோர்வு அடையாமல், தெங்கு - தென்னை மரம், தாள் - வேர்.

10. விடதாரி - விஷ வைத்தியன், ஆங்கு - அவ்விடத்தில், பாங்கு - நன்மை, புல்லறிவு - அற்பப் புத்தி, கலம் - மண் பாத்திரம்.

11. சான்றோர் - பெரியோர், நன்றி - உபகாரம், ஒன்றி - பொருந்தி, எழுந்த - உண்டான, கயவர்க்கு - அற்பர்க்கு, ஒன்று - ஒரு செயல், தீது - கெட்டது.

12. சாந்தனையும் - இறக்கும் வரையில், ஆந்தனையும் - தம் மாலானவரையில், மாந்தர் - மனிதர், குறைக்குந் தனையும் - (தன்னை) வெட்டி வீழ்த்தும் வரையில், கண்டீர் - முன்னிலை அசைச் சொல்.

13. பெருமை - பெருமையுடையவர், பணியும் - அடங்கி நடப்பர், சிறுமை-அற்பர், அணியும் - (தம்மைத்தாமே) பெருமையாக மதித்துக்கொள்வர்

14. சுட்டு - புகழ், யாண்டும் - எவ்விடத்திலும், மறவாமே - மறக்காமல், நோற்பது - அனுஷ்டிக்கத் தகுவது, ஒன்று - ஒரு விரதம், சீர் - சிறப்புகள், தூற்றி - (பலர் அறியும்படி) எடுத்துச் சொல்லி, சிறுமை - குறைகள், புறம் காத்து - வெளி விடாமல் பாதுகாத்து, தாழ்ச்சி - வணக்கமான வார்த்தை.

15. செவிச் செல்வம் - கேள்விச் செல்வம், தலை - முதன்மையானது.

16. திருவினை - செல்வத்தை, ஆக்கும்-வளர்க்கும், முயற்று-முயற்சி, இன்மை - இல்லாமை, இன்மை - வறுமை, புகுத்திவிடும் - அடையச் செய்துவிடும்.

17. ஊழ் - விதி, உப்பக்கம் காண்பர் - புறம் காண்பர் (தோற்கடிப்பர்), உலைவு - சோர்வு, தாழாது - குற்றப் படாமல், உஞற்றுபவர்-முயற்சி செய்பவர்.

18. ஒல்லும் - இயலும், அற வினை - தரும காரியம், ஓவாதே - இடைவிடால், செல்லும் வாய் - (செய்யக்) கூடிய இடத்தில், செயல் - செய்க.

19. யா - எல்லாவற்றையும், காவாராயினும் - காக்கமாட்டாராயினும், காவாக்கால் - காக்காவிட்டால், சொல் இழுக்குப் பட்டு - சொற்குற்றம் அடைந்து, சோகாப்பர் - வருந்துவர்.

20. காக்கின் - (துன்பமடையாமல்) காக்க விரும்பினால், சினம் - கோபம்.

21. ஒறுத்தார்க்கு - தண்டித்தவர்க்கு, இன்பம் - மகிழ்ச்சி, பொன்றும்துணையும் - (உலகம்) அழியும் வரையில்.

22. ஒழுக்கம் - நடக்கை, நன்றி - நன்மை, வித்து - விதை (காரணம்), இடும்பை - துன்பம்.

23. இங்கு - இவ்வுலகில், கீழ் - கீழ் மக்கள், புகல்வது - சொல்லுவது, சேக்கை - படுக்கை, பொழில்வாய் - சோலையில், வேம்பு - வேப்பம் பழம்.

24. பொய்யா விளக்கு - பொய் கூறுமையாகிய விளக்கு.

25. என் உடையர் எனும் - எப்பொருளையுடையவர் எனினும்.

26. துணிக - தொடங்குக, இழுக்கு - குற்றம்.

27. ஒழுகல் - நடத்தல், பெற்றத்தால் - பெற்றதனால்.

28. உள்ளம் - மனம், உள்ளல் - நினைத்தல், கள்ளத்தால் - வஞ்சனையால், கள்வேம் - கவர்ந்து கொள்ளுவோம், எனல் - என்று எண்ண வேண்டா.

29. சிறுமை பல - பல துன்பங்கள், சீர் - புகழ், சூதின் - சூதாட்டத்தைப் போல, வறுமை - தரித்திரம்.

30. மதியிலிகாள் - புத்தியில்லாதவர்களே, வஞ்சித்தோம் - மோசம் செய்துவிட்டோம், மகிழன்மின் - சந்தோஷிக்காதீர்கள், வஞ்சித்த - செய்த மோசங்களை, ஒருவன் - கடவுள், காணுங்கொல் - பார்த்துவிடுவானே, அங்கம் - உடல், குலைவது - நடுங்குவது.

31. பெருக்கு - வெள்ளம், அடி - பாதம், ஊற்று - சுரப்பு நீர், உலகு - உலகத்தார், ஊட்டும் - உண்பிக்கும், நல்கூர்ந்தார் - தரித்திரமடைந்தவர், இசைந்து - மனம் வந்து.

32. அரிய - கஷ்டமான காரியங்கள், செய்கலாதார் - செய்ய இயலாதவர்.

33. என்பு - எலும்பாலான உடம்பு.

34. அடுத்து-தொடர்ந்து, ஆகா - முடிவடையா, தொடுத்த-கிளைத்த, பருவம் - (பழுத்தற்குரிய) காலம், பழா - பழுக்கமாட்டா.

35. இல்லாள் - மனைவி, அகம் - வீடு, இல்லாள் - நற்குண நற்செயல்கள் இல்லாதவள், வலி கிடந்த மாற்றம் - கடினத் தன்மை பொருந்திய சொல், உரைக்குமேல் - பேசுவாளானல், தூறு - புதர்.

36. வெட்டெனவை - வெடித்த சொற்கள், மெத்தெனவை - இனிய சொற்கள், வேழம் - யானை, கோல் - அம்பு, நெட்டிருப்புப்பாரை - கட்டபாரை, நெக்கு - பிளவு, பாறை - கருங்கல்.

37. இனிய - இனிமையான சொற்கள், உளவாக - இருக்க, இன்னாத - துன்பந்தரத் தகுந்த சொற்கள், கவர்ந்தற்று - அபகரித்ததுபோலாம்.

38. வாராத - வரக்கூடாத பொருள்கள், போமின் - போங்கள், புண் ஆக - வருந்த, துஞ்சுவது - உறங்குவது, மாந்தர் - மனிதர்.

39. அரசு - அரசன், வீற்று இருந்த - சிறப்படைந்து இருந்த, விழும் - அழியும், அன்றே - அல்லவா, ஏற்றம் - உயர்வு, கண்டீர் - முன்னிலை அசைச்சொல், பணி - வேலை, பழுது - குற்றம்.

40. மற்று எல்லாம் - மற்றவர் அனைவரும், தொழுது - பிறரை வணங்கிச் சேவகம் செய்து.

---

The B. N. Press, Educational Printers, Madras—1933.

# கோபால் தமிழ் வாசக புத்தகங்கள்

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை

அ. மா. ஸ்ரீ. இராகவன், பி. ஏ., எல். டி.,

இப்புத்தக வரிசை தமிழ் கற்கும் சிறுவர்களுக்குத் தேசாபிமானத்தையும், பாஷா ஞானத்தையும், அறிவின் வளர்ச்சியையும் அளித்து, அவர்களைப் பரத கண்டத்து நற்குடிகளாக்கும் என்பது, கல்வித் துறையில் பரத கண்டத்தின் முன்னேற்றத்தைக் கருதிச் சலியாத ஊக்கத்துடன் உழைத்து வரும் பெரியோர் பலருடைய கொள்கையாகும். இதில் காணப்படும் பல அறிஞர்களுடைய அபிப்பிராயங்களே இவ்வுண்மையை விளக்கப் போதிய சான்றாகும். ஆதலின், தேச நன்மையைக் கருதும் ஆசிரியர்களும், மற்றப் பள்ளிக்கூடத் தலைவர்களும், இப்புத்தகங்களைச் சிறுவர்களுக்குப் பாடமாக ஏற்படுத்தி, எம்மை இத்துறையில் ஊக்குமாறு வேண்டுகிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| கோபால் புதிய தமிழ் வாசகம் | 1-ஆம் வகுப்பு | 0 | 2 | 6 |
| do | 2-ஆம் வகுப்பு | 0 | 3 | 0 |
| do | 3-ஆம் வகுப்பு | 0 | 4 | 0 |
| do | 4-ஆம் வகுப்பு | 0 | 4 | 6 |
| do | 5-ஆம் வகுப்பு | 0 | 6 | 0 |

---

Rev. FRANCIS KINGSBURY, B.A., Lecturer in Tamil, University of Ceylon, writes:—

"I have read the Gopal New Tamil Readers and I am of opinion that as a series they are good as any other series of Readers recently published in Madras. They have been well received by the school authorities and the Educational officers in the Madras Presidency."

---

Mr. T. B. KRISHNASWAMI MUDALIAR, M.A., B.L., District Educational Officer:—"Thank you for the set of Gopal New Tamil Readers. They are quite good and I am sure if better known will be more extensively used."

---

B. G. PAUL & CO., PUBLISHERS, MADRAS.